பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 16 புதன்கிழமை (31.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 012

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# சர்வகட்சிக் குழுவின் யோசனையை அமுல்படுத்துவதே உறுதியான தீர்வு

## பிரணாப் முகர்ஜி ஆலோசனை



(புதுடில்லி)

அதிகாரப் பகிர்வு தொடர்பாக சர்வ கட்சிக்குழு சமர்ப்பிக்கும் யோசனையை அமுல்படுத்துவதே இலங்கை இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வாக அமையும் என இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எரி பொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளைக் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒரு லீற்றர் பெற்றோல் 2 ரூபாயால் குறைக்கப்படவிருப்பதுடன், முச்சக்கர வண்டிகளுக்கான பெற்றோல் 20 ரூபாய்ாலும் குறைக்கப்படவுள்ளது. அதே நேரம் ஒரு லீற்றர் டீசலின் விலை 10 ரூபாயாலும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 10 ரூபாயாலும் குறைக்கப்படவுள்ளது.

சமையல் எரிவாயுவில் ஷெல் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 167 ரூபாயாலும் லாவ் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 276 ரூபாயாலும் குறைக்கப்படும் என அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் (12ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடு தாக்குதலின் போது டாங்கியை பயன்படுத்திய புலிகள்

(கொழும்பு)

இரணைமடு பகுதியில் கடந்த 20ஆம் திகதி படையினரின் முன்னரண் பகுதிகள் மீதான தாக்குதலின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் டாங்கியை பயன்படுத்தியுள்ளனர் என கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இரணைமடு பகுதியில் கடந்த 20ஆம் திகதி விடுதலைப்புலிகள் நடத்திய வலிந்த தாக்குதலின் போது ரி.55 ரக டாங்கியை பயன்படுத்தியுள்ளனர்.

இரணைமடுவின் வடக்குப் பகுதியில் 57-4ஆவது பிரிகேட்டின் இரு பற்றாலியன் கள் நிலைகொண்டிருந்தன. இவர்களின் பாதுகாப்பு நிலைகள் மீது விடுதலைப் புலிகளின் சிறப்பு அணிகள் வலிந்த தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலின் போது பாதுகாப்பு அரண்களை (12ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் மற்றும் எறிகணைத் தாக்குதலில் மூன்று சிறுவர்கள் உட்பட ஐந்து பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

படையினர் நடத்திய வான் மற்றும் எறிகணைத் தாக்குதல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளதுடன் பொதுமக்களின் வீடுகள் பலவும் சேதமடைந்துள்ளன என வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்.வடமராட்சி கிழக்கில் படையினரின் எறிகணைத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நாகர்கோவிலில் உள்ள படையினரின் பின் தளங்களில் இருந்து நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் இத் தொடர் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, நித்திய வெட்டை ஆகிய பகுதிகளில் உள்ள பொது மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து இந்த தொடர் எறிகணைத் தாக்குதல் படையினரால் (12ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு கப்பல்களில் புலிகளுக்கு ஆயுதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இரு கப்பல்கள் கடந்த சில வாரங்களில் ஆயுதங்களையும் மருத்துவ உபகரணங்களையும் தரையிறக்கியுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் பாதுகாப்பு ஆய்வு இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாரிய கப்பல் மற்றும் நடுத்தர றோலர் ஆகியவற்றின் மூலம் விடுதலைப் புலிகள் ஆயுதங்களையும் மருத்துவ உபகரணங்களையும் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை அறிவிப்பு எந்நேரமும் வெளிவரலாம்!

### அரசு தீவிரமாக ஆராய்வு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை இலங்கையில் தடை செய்வது குறித்து நேற்றிரவு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு எந்நேரமும் வெளியிடலாம் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் தடை விதிக்க மகிந்த ராஜபக்ஷ தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகிறார்.

நோர்வே அனுசரணையுடனான அமைதிப் பேச்சுக்களைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டு புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கியது.

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்னர் இந்த ஆண்டின் தொடக்கத்தில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வதாக (12ஆம் பக்கம் பார்க்க)

## இழந்தவற்றை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன்!



### யாழ்.மக்களுக்கு ஜனாதிபதி உரை

(கொழும்பு)

பயங்கரவாதத்தின் காரணமாக இழந்த எல்லாவற்றையும் மீண்டும் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்போம். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் உங்களது சகோதர சகோதரிகள் விடுவிக்கப்பட்டு அவர்களுடன் சந்தோசமாக இருக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

கிழக்கின் உதயம் போன்று வடக்கின் வசந்தமும் மிக விரைவில் ஏற்படுத்தப்படும். (02ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஏழு இலக்குகள் மீது பல தடவை விமானத் தாக்குதல்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப்புலிகளின் 7 இலக்குகள் மீது பல தடவை வான் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு வட பகுதியில் புலிகளின் இலக்கு ஒன்றின் மீது ஜெற் விமானங்களைப் பயன்படுத்தி நேற்றுக் காலை 8.40 மணியளவில் வான் தாக்குதல் நடத்தியதாக அவர் தெரிவித்தார்.

பரந்தன் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் இலக்கு மீது நேற்று காலை 8.45 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கிளிநொச்சி நகருக்கு மேற்காக அமைந்துள்ள புலிகளின் இலக்கொன்றின் மீது நேற்றுக்காலை (02ஆம் பக்கம் பார்க்க)

# பாரிய ஆட்பல நெருக்கடியை எதிர்கொள்ளும் படைத்தரப்பு

(கொழும்பு)

வன்னியை கைப்பற்றும் படை நடவடிக்கைகளில்படைத்தரப்பில் 10 ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளனர். இவை தவிர தப்பியோடிய மற்றும் காயமடைந்த படையினரின் எண்ணிக்கைகளும் ஆயிரக் கணக்கில் உள்ளன. எனவே தற்போது படைபலத்தை தக்கவைப்பதற்கு அரசாங்கம் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வருவதாக கொழும்பு படைத்தரப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னியில் கடந்த இரண்டு வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் படை நடவடிக்கையில் படையினருக்கு ஏற்பட்டுவரும் இழப்புக்கள் தொடர்பாக இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த விடய மறிந்த வட்டாரங்களைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர் என கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:

வன்னி நோக்கி படை நடவடிக்கைகளை தொடங்கியதில் இருந்து படைத்தரப்பு பாரிய ஆட்பல இழப்புக்களை சந்தித்துள்ளது. இருந்தாலும். இந்நடவடிக்கையை மிகுந்த சிரமத்துடன் அரசாங்கம் தொடர்ந்து வருகின்றது.

இக்காலப்பகுதியில் படையினர் புதிதாக எட்டு படையணிகளை உருவாக்கியுள்ளதுடன் பல கள முனைகளையும் திறந்துள்ளது. இதற்கு எதிராக விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வரும் எதிர்ச் சமர்களில் படையினர் என்றுமில்லாத அளவுக்குப் பாரிய இழப்புக்களை சந்தித்து வருகின்றனர்.

வன்னியை கைப்பற்றும் படை நடவடிக்கை தொடங்கப்பட்டதில் இருந்து கடந்த இரண்டு வருடங்களுக்குள் இதுவரை 10 ஆயிரம் படையினர் உயிரிழந்துள்ளதுடன் 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் பல ஆயிரம் பேர் உடல் அவயவங்களை இழந்துள்ளனர்.

இதே காலப்பகுதியில் 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படைகளில் இருந்த தப்பியோடி விட்டனர் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பாக இந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் மட்டும் 11 ஆயிரம் பேர் வரை தப்பியோடி விட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பெரும் நிலப் பிரதேசங்களை கைப்பற்றி வரும் படையினர் அதனை தக்கவைப்பதற்கான படை பலத்தேவையில் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். அதனை ஈடு செய்யும் முகமாக படைகளில் இளைஞர்களை சேர்க்கும் பொருட்டு தென்பகுதியில் உள்ள ஒவ்வொரு செல்லிடப்பேசிகளுக்கும் படையில் இணைந்து கொள்ளுமாறு தகவல்களை அரசாங்கம் அனுப்பிவருகின்றது.

மேலும் கிழக்கில் இருந்தும் யாழ். குடாநாட்டில் இருந்தும் வன்னி நோக்கி படையினரை நகர்த்தி வருவதுடன் சிறுவர்களையும் பெண்களையும் கூட படையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளையும் படைத்தரப்பு முடுக்கி விட்டுள்ளது.

இவை தவிர படையில் இருந்து தப்பியோடும் படையினரின் எண்ணிக்கையும் சமாளிக்க முடியாத அளவுக்கு அதிகமாக இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதனால் தப்பியோடுவோர் மீதான தண்டனைகளையும் அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

குறிப்பாக தப்பியோடி மீளக் கைதாகும் படையினரை தண்டிப்பதற்கு என புதிதாக தானியங்கி தண்டனை இயந்திரங்களைக் கூட அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது. (ச)

## செலான் வங்கிக்கு புதிய பணிப்பாளர்கள்

(கொழும்பு)

மத்திய வங்கியின் உத்தரவின் பேரில் இலங்கை வங்கியால் பொறுப்பேற்கப்பட்ட செலான் வங்கிக்கு புதிய மூன்று பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராக இருந்த ஈ. நாரன்கொட செலான் வங்கியின் புதிய பணிப்பாளர் குழுத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், லலித் வித்தான மற்றும் நியோமல் குணவர்த்தன ஆகிய இருவரும் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பணிப்பாளர் குழுவில் மேலும் இரண்டு வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. கோல்டன் கீ கடனட்டை நிறுவனத்தில் நடைபெற்ற நிதி மோசடி தொடர்பாக, அதனுடன் தொடர்புபட்டிருக்கும் மற்றொரு நிறுவனமான செலான் வங்கியின் சேவைகள் பாதிக்கப்படக்கூடும் என்பதற்காகவும் வங்கியின் நிலைமையை ஸ்திரப்படுத்தும் நோக்கிலும் செலான் வங்கியின் நிர்வாகத்தை பொறுப்பேற்குமாறு மத்திய வங்கி, இலங்கை வங்கிக்கு அறிவித்தது.

அதேநேரம் செலான் வங்கியின் பெரும்பாலான வாடிக்கையாளர்கள் நேற்று தமது வைப்புக்களை மீளப்பெற்றுக்கொண்டதை காணக்கூடியதாக இருந்தது. (ச-5)

## இழந்தவற்றை பெற்றுத்தர...

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்வி மற்றும் கைத்தொழில் கண்காட்சியை முன்னிட்டு யாழ்ப்பாண மக்களுக்கு விடுத்த செய்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு செய்ம்மதி மூலம் ஆற்றிய உரையில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது,

இந்த கண்காட்சியின் மூலம் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் எதிர்கால நோக்கு தெரிகிறது. சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் எனது வாழ்த்துக்கள். யாழ்ப்பாண மக்களையும் நான் வாழ்த்துகிறேன்.

வடக்கின் வசந்தம் உதயமாகின்றது. பல தசாப்தங்களுக்கு முன்னர் நாங்கள் ஒன்றாக யாழ். தேவியில் பயணம் செய்தோம். யாழ்ப்பாண மக்கள் கொழும்பில் வியாபாரம் செய்வது போல் அன்று மாத்தறை மக்கள் யாழ்ப்பாணத்தில் ஹோட்டல், பேக்கரி நடத்தினார்கள். யாழ்ப்பாண விவசாயிகளைப் போல் தைரியமாக இருக்கவேண்டுமென தென்பகுதி மக்கள் சொல்வார்கள். அதேபோல் தென்பகுதி மக்களைப்போல் சிநேகமாக இருக்கவேண்டுமென யாழ்ப்பாண மக்களும் சொல்வார்கள்.

இந்த நாட்டுக்கு சுதந்திரம் வேண்டுமென முதன் முதலாகச் சொன்னவர் யாழ்ப்பாண மாணவர் தலைவர்தான். எங்களைப் பிரிக்க முயற்சித்த ஏகாதிபத்தியவாதிகளை சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தமிழ் தலைவர்கள் அன்று தெரிந்து கொண்டார்கள். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளை நன்றாகத்தெரிந்த அன்றைய யாழ்ப்பாணத் தலைவர்கள் ஒன்றாக வாழவே விரும்பினார்கள். இந்த நாட்டில் வடக்கும் தெற்கும் பிரிந்து வாழ முடியாது. நாம் ஒன்றுபட்டு வாழவேண்டும்.

கடந்த கால துர்ப்பாக்கிய சம்பவங்களை மறந்து விடுவோம். யாழ்ப்பாண மக்கள் இழந்த எல்லாவற்றையும் மீண்டும் பெற்றுத்தர நாம் நடவடிக்கை எடுப்போம் பயங்கரவாதம் காரணமாக இழந்த எல்லாவற்றையும் மீண்டும் பெற்றுத் தருவோம். கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் அகப்பட்டுள்ள உங்கள் சகோதர சகோதரிகளும் இன்னும் சில நாட்களில் சந்தோஷப் படமுடியும் அப்போது கிழக்கின் உதயம் போல் வடக்கின் வசந்தம் உருவாகும்.

இந்தக் கண்காட்சி மூலம் சிறந்த திறமைசாலிகளும் விசேட நிபுணர்களும் உருவாகவேண்டும். அதற்குத் தேவையான தைரியம், சக்தி யாழ்ப்பாண இளைஞர் சந்ததியினருக்கு உண்டு என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனவே யாழ்ப்பாண வசந்தம் திறமைசாலிகள் எல்லோருக்கும் எனது இனிய வாழ்த்துக்கள். உங்கள் எல்லோருக்கும் ஒளிமயமான எதிர்காலம் பிறக்கட்டும். நன்றி- வணக்கம் என்றார். (ச-5)

## புலிகளின் ஏழு...

9.20 மணியளவில் வான் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பரந்தனில் பகல் 12 மணியளவில் மற்று மொரு வான் தாக்குதலும் முல்லைத்தீவு தென்பகுதியில் இலக்கொன்றின் மீது பகல் 12.45 மணியளவிலும் பரந்தன் பகுதியில் பிற்பகல் 1.10மணியளவிலும் வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

இதேவேளை எம்.ஐ-24 ரக தாக்குதல் ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி முல்லைத்தீவின் மேற்குப்பகுதியில் புலிகளின் இலக்கு ஒன்றின் மீது தாக்குதல் நடாத் தியுதாக அவர் தெரிவித்தார்.

புலிகள் ஒன்று கூடும் இடங்களைக் குறி வைத்தே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## இஸ்ரேல் தாக்குதல்கள் குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை

பலஸ்தீன அப்பாவிகள் மீது இஸ்ரேல் நடத்திவரும் வான் தாக்குதல்கள் குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை கொள்வதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கின் காசா பகுதியில் இஸ்ரேலியப் படைகள் நடத்திவரும் வன்முறைகள் உடனடியாக முடிபுக்கு கொண்டுவரப்பட வேண்டும். காசாவில் நடைபெற்றுவரும் மோசமான வன்முறைகள் குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இந்த வன்முறைகளை ஒரு முடிபுக்குக் கொண்டு வந்து மீண்டும் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு முடிபு காண சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்வரவேண்டும். பலஸ்தீனர்களின் உரிமைகளுக்காகவும் அவர்களுக்கான சுதந்திர தேசத்துக்காகவும் இலங்கை எப்போதும் ஆதரவளித்து வருகின்றது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச)

## புலிகளின் தாக்குதலில் இரு அதிரடிப் படையினர் பலி

(மட்டக்களப்பு)

அம்பாறையில் உள்ள வனப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைக்காகச் சென்ற சிறப்பு அதிரடிப் படையினரின் இரு அணிகளை வழிமறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கியுள்ளனர். இதில் அதிரடிப்படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர் என புலிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பொத்துவில் தொட க்கம் யால வரையிலான வனப்பகுதிக்குள் தேடுதல் நடவடிக்கைக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆயிரக்கணக்கான சிறப்பு அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் இரு அணிகளை நேற்றுக் காலை இரு தடவைகள் உகந்தை வனப் பகுதிக்குள் விடுதலைப்புலிகள் தாக்கினர். இதில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர் என விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (எ-1)

## திருவெம்பாவை உற்சவம்

வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய திருவெம்பாவை உற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 5 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகி சுவாமி வீதியுலாவரும் நிகழ்வும் இடம் பெறும். தினமும் திருவாதவூரடிகள் புராணப்படிப்பும் இடம் பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)


SUBRA வின் இதய அஞ்சலி

எமது கல்வி நிறுவன கணித ஆசிரியை
பாலினி அவர்களது பாசமிகு தந்தை

அமரர் நாகேசு தவராசா

கடந்த 27.11.2008இல் இறைபதம் அடைந்தமையை
இட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயக்குநர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

SUBRA கல்வி நிறுவனம்
சித்தன்கேணி- வட்டுக்கோட்டை

(C-1932)



Personal Class

புதிய ஆண்டிற்கான 01-12 வரையான வகுப்புகளுக்கு English Personal Class உம் Spoken With Grammar கற்க விரும்பும் மாணவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புக்கு : கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P. 077-1880466

(C-1934)



அறிவித்தல்

மா.சாள்ஸ், சி.இன்பராசா என்ற பேருடன் நரியன்குண்டில் நடத்தி வந்த மாட்டிறைச்சிக் கடை அந்த பேருடன் எதிர்வரும் 01.01.2009 அன்று புங்கங்குளம் மாட்டிறைச்சிக் கடையில் நடைபெறும் என்பதனை வாடிக்கையாளருக்கும் பாவனையாளருக்கும் அறியத்தருகின்றோம்.

மா.சாள்ஸ்,
சி. இன்பராசா,
கி.தனபாலன்.

புங்கங்குளம் றோட்,
புங்கங்குளச்சந்தி.

(2043)



SUBRA வின் கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகிறோம்

எமது கல்வி நிறுவன ஆங்கில ஆசான்
சதாசிவ ஐயர் சந்திரமௌலி ஐயர் அவர்களின்
பாசமிகு தந்தை

பிரம்மசிறி கனகசபாபதி ஐயர் சதாசிவ ஐயர்

கடந்த 21.12.2008 அன்று இறைபதம் அடைந்தமையை
இட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிக்கின்றோம்.

இயக்குநர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

SUBRA - சித்தன்கேணி
SUBRA - வட்டுக்கோட்டை

(C-1931)

# இன்று ஒரு தகவல்

## அளவும் அனுசரிப்பும்

ஒரு ஊரில் ஒருவன் தையல் கடை வைத்திருந்தான். அவனிடம் ஒருவன் சட்டைத்துணி ஒன்றைக் கொடுத்து தைக்கச் சொல்லியிருந்தான்.

"அடுத்த சனிக்கிழமை வந்து வாங்கிக் கொண்டு போ" என்றான்.

அதே மாதிரி இவன் வந்தான். தைத்து வைத்திருந்த சட்டையை வாங்கிப் போட்டுப் பார்த்தான்.

கை நீளம் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தது. வலது கை இடது பக்கத்தை விட நீளம் குறைவாக இருந்தது.

"என்ன இது...இப்படி தைத்து விட்டயே..." என்றான்.

அதற்கு அவன், "அட ... இதற்காகவா சங்கடப்படுகிறாய்? வலது கையை மட்டும் கொஞ்சம் உள்ளே இழுத்தபடி வைத்துக் கொள். சரியாகப் போய் விடும். மற்றப்படி அந்த சட்டையில் உள்ள கலையம்சத்தைக் கவனித்தாயா... எவ்வளவு அற்புதமாக தைத்திருக்கிறேன். ஒரு சின்னக் குறையைப் பொருட்படுத்தாமல் நான் சொன்னது மாதிரி கையைக் கொஞ்சம் இழுத்து வைத்துக்கொண்டு நடந்து போனால் ஜோராக இருக்கும்" என்றான்.

அவனும் யோசித்துப் பார்த்தான். நல்ல யோசனையாகத் தோன்றியது. கொஞ்சம் முயற்சி செய்து வலது கையை உள்ளே இழுத்து சட்டை சரியாக இருப்பது போல் செய்து கொண்டான்.

இப்பொழுது மறுபடியும் ஒரு பிரச்சினை.

வலது கையை உள்ளே இழுத்தது போல் வைத்துக் கொண்டதும் முதுகுப் பக்கம் தளர்வாகஇருப்பது போல் தோன்றியது.

"என்ன இது... முதுகுப்பக்கம் தளர்வாக இருக்கிறதே" என்றான்.

"இதற்காகவா கவலைப்படுகிறாய்? உடம்பை அதற்குத் தகுந்தாற் போல் கொஞ்சம் வளைத்துக் கொண்டால் சரியாகப் போய் விடும். இதற்காக அந்த அழகான தையலைப் பிரித்து அதிலுள்ள கலையம்சத்தை கெடுக்க என் மனம் இடம் தரவில்லை. எவ்வளவுக்கு தளர்த்தியாக இருக்கிறதோ அவ்வளவுக்கு கொஞ்சம் உடம்பை வளைத்துக் கொடு போதும்!" என்றான்.

அதுவும் நல்ல யோசனையாகப்பட்டது இவனுக்கு. சரி என்று சொல்லிவிட்டு புறப்பட்டான். தெருவில் இறங்கினான். கையைக் கொஞ்சம் உள்ளே இழுத்தான்... உடம்பைக் கொஞ்சம் வளைத்துக் கொண்டான்.

சட்டைக்குத் தகுந்த மாதிரி செய்து கொண்டு மெதுவாக நடந்து போனான்.

எதிரில் இன்னொருவன் வந்தான்.

இவன் போட்டிருக்கும் சட்டையைப் பார்த்தான். "ஆகா! அற்புதம்!" என்றான். "சும்மா சொல்லக்கூடாது மிகவும் நன்றாக இருக்கிறது. இது நிச்சயமாக இந்த ஊரில் மேலத்தெருவில் ஒருவன் இருக்கிறானே. அவன் தைத்ததாகத் தான் இருக்க வேண்டும். உண்மை தானே!" என்றான்.

இதைக் கேட்டதும் அவனுக்கு ஆச்சரியம்.

"எப்படி அவ்வளவு 'கரெக்டா' சொன்னீங்க?" என்று கேட்டான்.

அவன் சொன்னான். "உங்களை மாதிரி உடம்பும் கையும் வளைந்து போன ஒரு ஆளுக்கு அவனைத் தவிர வேறு யாரலும்இவ்வளவு பொருத்தமாக சட்டையைத் தைக்க முடியாது!"

அவனுக்காக இவன் அனுசரித்துப் போகப் போய் இவனுடைய நிலைமை எப்படி ஆகிவிட்டது பார்த்தீர்களா...

இதே மாதிரி தான் சில சங்கடங்களும் சம்பிரதாயங்களும் நம்மை கோமாளிகளாக்கி விடும்.

எதுவாக இருந்தாலும் அதில் அறிவுபூர்வமான அணுகு முறை அவசியம்.

ஒரு நேர்ஸ் அவசரமாக ஓடி வந்து டாக்டரிடம், "டாக்டர் ஒரு தப்பு நடந்து போச்சு! பத்தாம் நம்பர் வெட்டில் இருக்கிற நோயாளிக்கு காலில் ஒப்றேசன் செய் வதற்குப் பதிலாக கையில் ஒப்றேசன்நடந்து விட்டது. கையில் ஒப்றேசன் பண்ணிக் கொள்ள வேண்டியவர் ஏழாம் நம்பர் வெட்டில் இருக்கிறார்" என்றார்.

அதற்கு இவர் பதட்டப்படாமல், "பரவாயில்லை! இவரைத் தூக்கி ஏழாம் நம்பர் வெட்டில் போட்டு விடு" என்றாராம்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## சம்பள அதிகரிப்பு இன்மையால்

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியை புறக்கணிக்க ஆசிரியர்கள் முடிவு

(கொழும்பு)

க.பொ.த சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி இன்று ஆரம்பமாகவுள்ளதாகவும் இப்பணியை ஆசிரியர்கள் பகிஷ்கரிக்க தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசுஇன்னும் நடவடிக்கை எடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இம் முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

க.பொ.த சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி ஆரம்பமாகின்றது.

இதில் கலந்து கொள்வது தொடர்பாக முடிவெடுத்தே கடந்த ஞாயிற்றுக்கிழமை எமது சங்கத்தின் நிறைவேற்றுக் குழு கூடியது.

ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்கஅரசுஇன்னும் நடவடிக்கை எடுக்காமைக்கும் சாதாரண தரப் பரீட்சை கணித பாடம் தொடர் பில் ஏற்பட்ட பிழைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக விடைத்தாள் திருத்தும் பணிகளை முற்றாக பகிஸ்கரிப்பது என எமது சங்கத்தின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்தது.

இதனூடாக மாணவர்கள கல்வியைபாதிக்கச் செய்வது எம நோக்கமல்ல ,சம்பள அதிகரிப்பு தொடர்பான எமது உரிமைகளை வென்றெடுப்பதே இந்த பகிஸ்கரிப்பின் நோக்கம்.

சம்பள அதிகரிப்புத் தொடர்பாக அரசு திருப்திகரமானதொரு தீர்மானத்தை எடுத்தால் நாம் எமது மாற்றத்தை வெளிப்படுத்துவோம். இல்லாது விட்டால் திருத்தப் பணியை பகிஸ்கரிப்பது என்ற முடிவில் எந்த மாற்றமும் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# பறவைக் காய்ச்சல் பரவுவதை தடுக்க விசேட செயற்திட்டம்

(கொழும்பு)

நாட்டிற்குள் பறவைக் காய் ச்சல் பரவுவதை தடுப்பதற்கான விசேட செயற்திட்டம் ஒன்றை அடுத்த வருடம் நடைமுறைப்படுத்த உள்ளதாக கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் சுற்றுலாப் பறவைகள் அதிகம் காணப்படும் பகுதிகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக திணைக்களத்தின்பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

பறவைக் காய்ச்சல் நாட்டுக்குள் பரவுவதை தடுப்பது தொடர்பாக விரிவானஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

பறவைகள் அதிகளவில் உயிர் இழக்கும் சம்பவங்கள் தொடர்பான தகவல்களைப்பெற்றுக் கொள்வதற்கான விசேட தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தவதற்கும் நடவடிக்கை எடுத்து வருவதாக டாக்டர் சுவர்ணலதா கேரத் கூறினார்.

பறவைக்காய்ச்சல் தடுப்பு செயற்றிட்டத்திற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிதி உதவி கிடைப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த செயற்திட்டத்தின் தேர்ச்சியை உலக வங்கியின் பிரதி நிதி ஒருவரும் உலக வங்கியின் இலங்கைக் கிளையின் அதிகாரி ஒருவரும் கண்காணித்து வருவதாகவும் டாக்டர் சுவர்ண லதா கேரத் குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது பறவைக் காய்ச்சல் அச்சுறுத்தல் இல்லாத போதிலும் மக்கள் அது தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரி விக்கன்றன. பறவைக் காய்ச்சல் காரணமாக இந்தியாவில் உள்ள கோழி ப் பண்ணைகளில் 2 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிகளை அழிப்பதற்கு உத்தர விடப்பட்டுள்ளது. (ஓ-4)

## இராசி பலன்

31.12.2008
(மார்கழி 16, புதன்கிழமை)
சதுர்த்தி பின்னிரவு 12.56 மணிவரை
அவிட்டம் பின்னிரவு5.17மணிவரை
இராகுகாலம்-12.29-1.59 மணிவரை
சுபநேரம்-4.59-6.29 மணிவரை
சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | கடின முயற்சி, அதிகாரம், போசனசுகம், தூரதேசச் செய்தி |
| இடபம் | புதிய திட்டமிடல் ,தந்தை வழி உறவு காரியதாமதம்,இடமாற்றம். |
| மிதுனம் | வீண்பிரச்சினை,முயற்சி தடங்கல், ஆரோக்கியக் குறைவு, திடீர் நன்மை. |
| கடகம் | செல்வாக்கு,முயற்சிகை கூடும், தெய்வ நம்பிக்கை, போசன சுகம் |
| சிங்கம் | தேகநலன், தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்ல செய்தி, மனமகிழ்ச்சி. |
| கன்னி | வியாபாரசிந்தை, ரோகநிலை, தன்னம்பிக்கைக் குறைவு,பணவிரயம். |
| துலாம் | மாதர் சுகம்,கல்வியில் ஆர்வம், மனச் சஞ்சலம், எடுத்த கருமங்கள் தாமதமாகும். |
| விருச்சிகம் | அன்னியர் சந்திப்பு,சுபநிகழ்வு, காரிய அனுகூலம், போசன சுகம். |
| தனுசு | அதிக செலவு, உணர்ச்சிவசப்படல், முயற்சி தாமதம், பிரயாணம். |
| மகரம் | பெரியோர் உதவி, நல்ல முயற்சி,தெய்வ சிந்தை, போசன சுகம் |
| கும்பம் | பிரயாணம், அமைதிக்குறைவு, மனஸ்தாபம், காரிய தாமதம். |
| மீனம் | குடும்ப சுகம், போசன நன்மை,செய் தொழில் விருத்தி,காரிய சித்தி. |

வளவன்

# இலங்கைப் பெண் குவைத்தில் கைது

(கொழும்பு)


நாட்டில் சட்ட விரோத போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் உள்ளிட்ட இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப் பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டதாகக் குவைத் நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு வேறு இடங்களில் சட்ட விரோதமான முறையில்போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட குறித்த நபர்களைக் கைது செய்ததாக அந் நாட்டு போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட பங்களாதேஷ் நபரிடம் 10 கிராம் மர்ஜுவானா காணப்பட்டதாகவும் விசாரணைகளைத் தொடர்ந்து மேலும் 60கிராம் போதைப் பொருள் மீட்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இலங்கை பணிப்பெண்ணிடம்100கிராம்போதைப் பொருள் வில்லைகள் காண ப்பட்டதாகவும் விசாரணைகளைத் தொடர்ந்துமேலும் 900 வில்லைகள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அந் நாட்டு போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஓ-6)



முத்தமிழ்க் கலைஞர் செ.பரமநாதன் கலை இலக்கியத்தில் ஈடுபட்டு 50 ஆவது ஆண்டை முன்னிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும் தமிழக சமூக நலத்துறை முன்னாள் அமைச்சருமான திருமதி சற்குணபாண்டியன் அவருக்கு பரிசுப் பொருட்களை வழங்குவதையும்,திருமதி. ஜெயலட்சுமி பரமநாதன் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சுகாதார விழிப்புணர்வு வினாவிடை போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் பொதுமக்கள், பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட 'சுகாதார விழிப்புணர்வு' சம்பந்தமான வினா விடைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றி சரியான விடை எழுதிய 212 பேரில் பரிசில் பெறுவோர் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி ம. பரமேஸ்வரன், மேற்பார்வையில் பொது சுகாதார பரிசோதகர் தி. கிளின்டஸ் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் இத் தெரிவு நடைபெற்றது.

*இதில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர்.*

திருமதி. உ. சகிலறோகினி – சாவகச்சேரி. ப.நோ.கூ. சங்கம், இ. பிரிந்தன் – சரசாலை தெற்கு, த. பீதாம்பரம் – சரசாலை பொது நூலகம்.

*ஆறுதல் பரிசில்கள் பெறுவோர்*

சி. சாந்தினி – மீசாலை கிழக்கு, ரி. பிரபாகரன் – சாவ. ஆதார வைத்தியசாலை, சு. சுவேனியா – மீசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம், சி. சாந்தினி – கச்சாய் அ.த.க. பாடசாலை, கா. நிசாந்தினி – கொடிகாமம், திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், க. பாஸ்கரன் – சாவ. பிரதேச சபை, த. தவணிரஜன் – மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம், ரி. சுப்பிரமணியம்– சாவ. ஆதார வைத்தியசாலை, மா. சரோஜாதேவி – நாவற்குழி வீடமைப்புத் திட்டம், சோ. பாலகிருஷ்ணன் – சாவ. பிரதேச சபை.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வழங்கப்படவுள்ளது. (ஓ-29)

## கல்ப தரு தினம்

(யாழ்ப்பாணம்)

ஜனவரி முதலாம் திகதியில் கேட்டதைக் கொடுக்கும் கற்பக தரு (மரம்) போல் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் பக்தர்களுக்கு அருள் புரிந்தமையால் அத் தினத்தை கல்பதரு நாள் என ஸ்ரீ இராம கிருஷ்ண மடங்களில் கொண் டாடப்பட்டு வருவதாக பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதாசேவாச்சிரம சுவாமி சித்ரூ பானந்தா தெரிவித்துள்ளார். (ஓ)

## புதுவருட ஆராதனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரம அனுசரணையுடன் புதுவருட ஆராதனை நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு பருத்தித்துறை,தும்பளை அஞ்சலியகத்தில் டேமியன் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-4)

## யாழ். குடாக்கடலில் ஆமை பிடித்தவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக்கடலில் சட்ட விரோதமாக கடலாமை பிடித்த குற்றஞ்சாட்டில் யாழ்ப்பாண மீனவர் ஒருவரை கடந்த திங்கட்கிழமை பொலிசார் கைது செய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இந்த வழக்கை விசாரித்த மேலதிக நீதவான் அ. ஆனந்தராஜா சட்டவிரோதமாக கடலாமை பிடித்து இறைச்சிக்காக பயன்படுத்தி முற்பட்டமைக்காக ஆயிரம் ரூபா அபராதம் விதித்தும் பணம் செலுத்த தவறும் பட்சத்தில் 6 மாத சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளித்துள்ளார். (ஓ-7-10)

## இலவச சீருடை விநியோகம்

(கோப்பாய்)

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் தவறாது ஆசிரியர்களையும், மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அப்பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஓ-79)

❖❖❖❖❖

(கோப்பாய்)

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மாணவர்களுக்கான சீருடை விநியோகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளதால் அப்பாடசாலை ஆசிரியர்களையும், மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஓ-79)

❖❖❖❖❖

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகம் கடந்த ஞாயிறு முதல் இன்று புதன் கிழமை வரை நடைபெற்று வருகிறது. எனவும் சீருடை பெறவுள்ள மாணவர்களை காலை 9 மணிமுதல் பி.ப 1 மணிக்குள் கல்லூரிக்கு சமூகமளித்து சீருடைகளை பெற்றுக்கொள்ளுமாறும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் அன்ரன் சந்திரன் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். (ஓ-27)

## சந்தை நேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கொக்குவில் மீன்சந்தை பின்னேரமும் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை செயலாளர் எம். சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

எனவே மீன் விநியோகம் செய்ய விரும்பும் வியாபாரிகள் நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வியாபாரிகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு சந்தை வரி விலக்களிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-10)

## இன்னிசை ஆராதனையும் நற்கருணை வழிபாடும்

(வட்டுக்கோட்டை)

நிஷா புயல் வெள்ளப் பெருக்கினால் சேதமடைந்த தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண திருமறை சிறுவர் இல்லம் மீண்டும் புனரமைக்கப்பட்டு நாளை வியாழக்கிழமை இன்னிசை ஆராதனையும் அதனைத் தொடர்ந்து தென்னிந்திய திருச்சபை பேராயர் அதிவண. கலாநிதி டி. எஸ். தியாகராஜாவினால் ஆசீர்வாத ஆராதனையும் நற்கருணை வழிபாடும் நடாத்தப்படவுள்ளது.

மேலும் யாழ் நகர் பணி திருச்சபையில் பரிசுத்த நற்கருணை ஆராதனையும் வழிபாடும் பேராயர் அதிவண. கலாநிதி டி. எஸ். தியாகராஜாவினால் நடாத்தப்படவுள்ளது.

எனவே இரு நிகழ்வுகளில் அனைத்து தென்னிந்திய திருச்சபை சிறுவர் இல்ல பிள்ளைகளையும் மற்றும் அனைவரையும் கலந்து கொண்டு நிகழ்வுகள் சிறப்புற அமைய ஒத்துழைப்பு வழங்குமாறு தென்னிந்திய திருச்சபையின் அனைத்து சிறுவர் இல்ல பொது முகாமையாளர் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியருமான அன்ரன் சந்திரன் பிரான்சிஸ் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-27)

## மக்கள் வங்கி கிளைகளில் மட்டுப்படுத்தப்பட்ட சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் வருட இறுதி வேலைகளை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு இன்று காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் என மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளர் த.க. ஆனந்தராசா அறிவித்துள்ளார். (ஓ)

## சீருடை விநியோகம்

(யாழ்ப்பாணம்)


பெரியபுலம் மகா வித்தியாலய மாணவர்களுக்கான சீருடை விநியோகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படுமென வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## திருவாசகம் முற்றோதலும் திருவெம்பாவை ஓதலும்

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாண சைவ பரிபாலன சபையினரால் நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருவாசகம் முற்றோதல் இடம் பெறவுள்ளது.

அத்துடன் நாளை முதல் 10 ஆம் திகதி சனிக்கிழமை வரை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு திரு வெம்பாவை ஓதலும் இடம் பெறவுள்ளது. (ஓ-10)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கான அஞ்சல் அடையாள அட்டை விநியோகம் யாழ். பிரதம அஞ்சல் அலுவலகத்தால் அண்மையில் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற போது அதிகாரிகள் மாணவர்களுக்கான அஞ்சல் அடையாள அட்டைகளை விநியோகிப்பதையும் கல்லூரி அதிபர் வி. கணேசராசா, பொறுப்பாசிரியர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

அடுத்த வருடம் 2009 இல் நடைமுறைப் படுத்தப்படவுள்ள தரம் 5 வகுப்பிற்கான புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்பான செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

இதன் பிரகாரம் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 2009 இல் தரம் 5 இல் கற்பிக்கவுள்ள சகல ஆசிரியர்களுக்குமான செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலுள்ள ஆசிரியர் நிலையத்தில் ஜனவரி மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் பி.பகல் 4.00 மணி வரை நடைபெறும் என வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார். (ஓ-19)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களிற்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதிப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல்3 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஜொனியனஸ் விளையாட்டு கழகத்தினை எதிர்த்து D.E மசனட் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4மணிக்கு சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஓ-4)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நி யான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் கார்த்திகை மாத இதழ் வெளிவந்துள்ளது. (ஓ)




## உர விநியோகம்

(சாவகச்சேரி)

வரணி வடக்கு விவசாய சம்மேளனம் இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து உர விநியோகம் மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளது.

எனவே அப்பகுதி விவசாயிகள் உரத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஓ-29)

## யாழ். இளைஞர் கொழும்பில் கைது

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்த சிவசோதிராஜா சிவக்கிரீவன் (வயது - 20) என்ற இளைஞர் கொழும்பில் வைத்துக் 15-10-2008 இல் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக இவரது உறவினர்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் கடந்த திங்கட்கிழமை முறைப்பாடு செய்துள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஓ-10)

## திருக்காட்சிப் பெருவிழா

(ஊர்காவற்றுறை)

மூன்று ஞானிகள் திவ்விய யேசுபாலனை, சந்திக்கும் திருக்காட்சிப் பெருவிழாத் திருப்பலி எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை6.30 மணிக்கு ஊர்காவற்றுறை மேற்கு வீதி புனித யாகப்பர் ஆலயத்தில் நடை பெறவுள்ளது. (ஓ-72)

# இலங்கையில் தமிழர் 27

## மக்கள் வருகை

### புதிய கால கட்டம்

ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் மத்தியில் உயரிய பண்பாட்டுச் செல்வாக்கு வடக்கிலிருந்து பரவியது. வேறும் உயரிய செல்வாக்கு மேற்கிலிருந்தும் பரவியிருக்கலாம். இச் செல்வாக்குகளின் வருகையால் பாரிய மாற்றங்கள் சில ஏற்பட்டன. அரசியலமைப்புகள் முதன் முறையாகத் தோன்றுவதற்கும் இவை வழிவகுத்தன. புதிய பண்பாட்டுச் செல்வாக்குகளின் வருகை மற்றும் புதிய மொழிகளின் வருகை ஆகியவை புதிய மக்கள் புலம்பெயர்ந்து வந்து பழைய மக்களை அகற்றியதற்கான அறிகுறிகளாக முன்னர் கருதப்பட்டன. ஆனால் ஆதிவரலாற்றை ஆய்வு செய்வோரும் வரலாற்று மொழியியலாளரும் இன்று இத்தகைய கருத்துக்களை ஏற்பதில்லை. இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் நிலவிய இடைக்கற்காலப் பண்பாடு தென்னிந்தியா - இலங்கைப் பிராந்தியம் முழுவதுக்கும் பொதுவான பண்பாடாகும். இப் பிராந்தியத்தில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குத் தங்கு தடையின்றிப் பண்பாட்டுக் கூறுகள் பரவின. அதுபோல மக்கள் கூட்டங்களும் சென்று வந்தன. முழுப்பிராந்தியத்திலும் ஒரு பொதுவான தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டது. அங்கு பேசப்பட்ட மொழிகள் கூட முழுப் பிராந்தியத்துக்கும் பொதுவான மொழிகளாக இருந்தன எனலாம். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தென்னிந்தியாவில் இடைக்கற்காலத்தின் இறுதியில் புதிதாகப் பரவிய பண்பாட்டுச் செல்வாக்குகள் உடனடியாகவோ காலந் தாழ்த்தியோ இலங்கைக்கும் பரவுவது தவிர்க்க முடியாததாக இருந்தது. இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் புதிய பண்பாட்டுச் செல்வாக்குகள் அங்கு பரவி, முழுப்பிராந்தியத்திலும் பாரதூரமான மாற்றங்களை ஏற்படுத்தின.

## ஆதி இரும்புக் காலம்

*நாகரிகத்தின் தொடக்கக் கட்டம்*

### ஒரு புதிய காலத்தின் உதயம்

இலங்கைத் தமிழர் என்று பெயர் பெறும் இனக் குழுவின் தோற்றத்தை ஆய்வு செய்ய ஆதி இரும்புக் காலத்தில் தொடங்க வேண்டும். இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய ஆதி இரும்புக் காலத்தில் வந்தடைந்த புதிய பண்பாட்டுச் செல்வாக்குகளின் விளைவாக இலங்கையின் இரு முக்கிய இனக் குழுக்கள் ஆக்கம் பெறத் தொடங்கின.

இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் இந்தியத் தீபகற்பப் பகுதியில் மேற்குக் கரை வழியாகப் புதிய பண்பாட்டுக் கூறுகள் தென்னிந்தியாவுக்குள் பரவத் தொடங்கின. இவ்வாறு பரவத் தொடங்கிய புதிய பண்பாட்டைப் ப ற்றிய பல முக்கியமான விஷயங்கள் இன்னும் அறியப்படாதவையாய் உள்ளன. கடந்த முப்பதாண்டுக் காலத்தில் இப்பண்பாடு பற்றிய ஆய்வில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தும், சில முக்கியமான வினாக்களுக்குத் திருப்தியளிக்கும் விடைகளைக் கொடுக்க முடியாத நிலை இன்னும் உள்ளது. இதனால் மேலும் இதுபற்றிப் பெருமளவு ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

### புதிய பண்பாட்டின் பெயர்

இப்பண்பாட்டின் முக்கிய கூறுகளுள் ஒன்று இரும்பின் உபயோகம் ஆகும். இக்காரணத்தினால் இப்பண்பாடு மேலோங்கியிருந்த காலத்தில் இரும்புக்காலம் என்றும், பண்பாட்டை இரும்புக் காலப் பண்பாடு என்றும் பொதுவாக அறிஞர் அடையாளம் கண்டனர். ஆனாலும், பெருங்கற் பண்பாடு என்ற பெயர் இதற்குப் பரவலாக வழங்கப்பட்டு வருகின்றது. பெருங்கற் பண்பாடு என்ற பெயரையும் இரும்புக் காலப் பண்பாடு என்ற பெயரையும் ஒரே பண்பாட்டைக் குறிக்கும் பெயர்களாகக் கொள்ள முடியாது எனச் சில அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பெருங்கல் சவ அடக்கம், இரும்புக் காலப் பண்பாட்டுக் கூறுகளுடன் எப்பொழுதும் காணப்படும் ஒரு கூறல்ல என்பதால், பொதுப்பட இரும்புக் காலப் பண்பாட்டைப் பெருங்கற் பண்பாடு என்று கூறுவது தவறு என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கருத்தாகும். இதனால் இந்நூலில் 'ஆதி இரும்புக் காலம்' என்ற பெயர் கையாளப்படுகிறது.

### புதிய பண்பாட்டின் கூறுகள்

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் இப்பண்பாட்டின் பரம்பலை ஆழமாக ஆய்வு செய்த பேராசிரியர் , ஸுதர்ஷன் ஸெனெவிரத்ன, அதன் முக்கிய கூறுகளைப் பின்வருமாறு காட்டியுள்ளார்.

1. தொடக்க நிலையிலுள்ள மிகவும் அடிப்படையான உலோகத் தொழில் நுட்பம் (இரும்பின் உபயோகம்);
2. மட்பாண்டச் செய்கைக்குரிய சில் ;
3. உழுவதற்கான ஏர் ;
4. நெற் பயிர்ச் செய்கை ;
5. குளம் மற்றும் அணைக்கட்டு ஆகியவற்றின் உதவியுடன் நீர்ப்பாசனம்;
6. சிறுகைத் தொழில்களைச் சிறப்புத் தொழில்களாகச் செய்யத் தொடங்கியமை ;
7. சுற்றாடலை முன்னைவிடத் திறமையாகக் கட்டுப்படுத்திப் பயன்பெறக் கூடிய நிலை ;
8. புதிய குடியிருப்புகளை நிறுவி , ஓரிடத்தில் வாழ்ந்து ஊர்களை உருவாக்கும் போக்கின் தொடக்கம் ;
9. பண்டமாற்றம் நடைபெறுவதற்கான மையங்களின் தோற்றமும் இத்தகைய மையங்கள் பல ஒன்றோடொன்று வர்த்தக மார்க்கங்களால் தொடுக்கப்பட்ட ஒரு வலையமைப்பின் வளர்ச்சியும் ;
10. மக்கள் தொகை வளர்வதற்கு வழிகோலும் சூழ்நிலை உருவாகல் ;
11. குறுநில அரசுகளின் தோற்றம் ;
12. குதிரை அறிமுகப்படுத்தப்படுதல் ;
13. புதிய சவ அடக்குமுறைகள் கையாளப் படுதல் ;

பேராசிரியர்
கா. இந்திரபாலா

14. புதிய மட்பாண்ட வகைகள் ஆக்கப்படுதல் (கரும் செம்மட்பாண்டம் போன்றவை)

இடைக்கற்கால மக்களுடைய சமூகம் இப் புதிய பண்பாட்டின் வருகையால் முற்றாக மாற்றமடைந்தது. இப் பாரிய மாற்றம் ஏற்படப் பல நூற்றாண்டுகள் சென்றன.

### இரும்பின் உபயோகம்

இரும்பின் வருகை மிகப் பாரிய பொருளியல் விளைவுகளை உண்டு பண்ணிய ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். இரும்பின் வருகையால் முக்கியமான சமூக, அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் விளைவிக்கப்பட்டன. வட இந்தியாவில், குறிப்பாக மேல் கங்கைச் சமவெளியில் இரும்பின் வருகை ஒரு புதிய பண்பாடாகிய Painted Grey Ware Culture என்ற பண்பாட்டுடன் தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியாகும். இது இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் பரவத் தொடங்கிய பண்பாடாகும். (தொடரும்)



நல்லூர் பிரதேச சபையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும், இடமாற்றம் பெற்றவர்களுக்குமான பிரியாவிடை நிகழ்வு கொக்குவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நல்லூர் பிரதேச சபை செயலாளர் தலைமையில் நடைபெற்றபோது, பிரதேச சபை செயலாளர் எம். சாந்தசீலன் உரையாற்றுவதையும், கௌரவிக்கப்பட்டவர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேசசபை ஊழியர்களையும் படத்தில் காணலாம்.

# இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால தமிழ்பத்திரிகைகளும் - யாழ்ப்பாணமும் 2

1915 ஆம் ஆண்டு தொடக்கம் 1930 வரையிலான காலப் பகுதியில், பத்திரிகைகள் அதிக அளவில் கிடைக்காது போனமைக்கு, பத்திரிகைகள் அதிகமாக வெளியிடப்படாது போனமையும் ஒரு காரணமாக அமையலாம். இவ்வாறு பத்திரிகைகள் வெளியிடப்படாது போனமைக்கு அக்காலத்தில் முதலாம் உலகப் போர் ஆரம்பித்தமையும், இலங்கையில் சிங்கள- முஸ்லிம் கலகம் இடம் பெற்றமையும் காரணங்களாக இருக்கக் கூடும். இவை ஆதாரங்கள் கிடைக்கும் பட்சத்திலேயே உறுதிப்படுத்தப்படக் கூடியதாகும்.

கிறிஸ்தவ மிஷனரிமார்களால் மதம் பரப்பும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட அச்சுத் தொழில் நுட்பம், வட இலங்கையில் விரைவாகவே பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ மிஷனரிமார்கள் தமது மதம் சார்ந்த துண்டுப் பிரசுரங்களையும்,நூல்களையும் வெளியிட்டதுடன், பிற மதங்களை விமர்சித்தும் துண்டு பிரசுரங்களையும், நூல்களையும் வெளியிட்டு வந்துள்ளனர். தமது மதச் செல்வாக்கினை விஸ்தரிக்கும் நோக்கில் அவர்கள் பத்திரிகைகளையும் வெளியிடத் தொடங்கினர். 1834ஆம் ஆண்டில் அமெரிக்க மிஷனரிகளின் அச்சகமொன்று மானிப்பாயில் நிறுவப்பட்டது.

1841 ஆம் ஆண்டில் முதலாவது தமிழ்ப் பத்திரிகையையும் வெளியிட்டனர். அப் பத்திரிகை மதப்பரப்புதலை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட போதிலும் உலகியல் சார்ந்த விடயங்களிலும் கவனம் செலுத்தத் தவறவில்லை. அந்தவகையில் மிஷனரிமார்களின் மத நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கிய ஆறுமுக நாவலரும், பிறரும், அச்சுக்கயையினைக் கிறிஸ்தவ மதப் பரப்புரைக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்ளும் சாதனமாக ஒரு புறத்தில் பயன்படுத்தினர். மறுபுறத்தில், இது வரை காலமும் ஓலைச்சுவடிகளிலிருந்த புராதன தமிழ் இலக்கியங்களையும் சைவ சமய நூல்களையும் பரிசோதித்து பதிப்பிப் பதிலும் ஈடுபட்டனர். ஒரு புதிய தொழில் நுட்பத்தை பழமையையும், மரபையும் பேணிப் பாதுகாக்கும் வகையில், வட இலங்கையின் முன்னோடிகளாகவும் காத்திரமாகவும் செயற்பட்டனர்.

1863 இல் வைமன் கதிரைவேற்பிள்ளை 'Ceylon Patriot' என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடாத்தி வந்தார். இது சமய சார்பற்ற வகையிலே நடத்தப்பட்டவொரு ஆங்கிலப் பத்திரிகையாகக் காணப்பட்டதெனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அது நீண்ட காலம் தொடர்ந்து வெளிவந்த பத்திரிகையாகவும் விளங்கியது. இதனைத் தொடர்ந்து, 1876இல் கத்தோலிக்கத் திருச்சபையால் 'கத்தோலிக்க பாதுகாவலன்' என்ற பத்திரிகை வெளியீடு ஆரம் பித்திருந்தது.

'இலங்கை நேசன்' (Lanka Snakan) என்ற பத்திரிகை ஆறுமுக நாவலர் காலத்தில் வெளிவந்தது. 'உன்னை அறி உன் முடிவினைச் சிந்தை செய்' என்ற மகுட வாசகம் தாங்கியதாக உள்ளது. 1878 ஆம் ஆண்டில் இரண்டாம் புத்தகத்தின் தொகுதி குறிப்பிடப்பட்டு இருப்பதால், இது 1877 ஆம் ஆண்டில் வெளியிடப்படத் தொடங்கியிருக்க வேண்டும். இப்பத்திரிகையின் சிதைவடைந்த பத்திரிகைத் துண்டுகளில் ஒன்றில், ஆறுமுக நாவலரின் மரணம் பற்றிய அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 'சைவ உதய பானு' என்ற பத்திரிகை, 1881 ஆம் ஆண்டில் வெளிவந்திருந்தது. அதில் உதய சூரியன் படம் அச்சிடப்பட்டுள் ளதுடன், 'The Salvite Rlsing Sun' என ஆங்கிலத்திலும் பெயர் அச்சிடப்பட்டுள்ளது. அப்பத்திரிகையில், 'சோமவாரந்தோறும் பிரகடனஞ் செய்யப்படும்' எனவும் எழுதப்பட்டிருந்தது. இப்பத்திரிகை சைவப் பிரகாச சமாசியத் தவர்களால் வெளியிடப்பட்டது. சு. சரவணமுத்துப்பிள்ளை இதற்கு ஆசிரியராக இருந்துள்ளார். சைவபிரகாச சமாசியமானது சைவ பரிபாலன சபைக்கு முற்பட்டதாகும்.

1884 இல் எஸ். தம்பிப்பிள்ளை என்ற தனிநபரால் 'சன்மார்க்க போதினி' என்றவொரு பத்திரிகை வெளிவரத் தொடங்கியிருந்தது. இது, அச்சுவேலியில் அமைக்கப்பட்டிருந்த ஞானப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

திருமதி சோ. கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இது ஒவ்வொரு மாதத்திலும், ஒன்று விட்டொரு சனிக்கிழமை வெளி வந்தது. இப்பத்திரிகை நீண்ட காலம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

1884 ஆம் ஆண்டில் 'விஞ்ஞான வர்த்தனி' என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. அதன் பெயர் ஆங்கிலத்திலும் 'The Intelectual Preceptor' எனப் பொறிக்கப்பட்டிருந்தது. இப்பத்திரிகையின் மகுட வாக்கியமாக 'தக்கன் வேள்விப் பொக்கந் தீர்த்த தேவர் பக்கத்தோமே' என எழுதப்பட்டுள்ளது. (தொடரும்)

## விஷ வைத்தியத்திற்காக பெருமளவு நிதி விரயம்

(கொழும்பு)

இலங்கையில் வருடம் ஒன்றிற்கு விஷம் அருந்தித் தற்கொலை முயற்சி செய்வார்களின் எண்ணிக்கை 60 ஆயிரமாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர பாம்புக் கடிகாரணமாக வைத்திய சாலையில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 40 ஆயிரமாக காணப்படுவதாக கொழும்பு பல்கலைக்கழக விஷகடி பிரிவைச் சேர்ந்த நிபுணர் ரவீந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இதன் காரணமாக சுகாதார அமைச்சிற்கு பெருமளவான நிதி விரையமாவதாகவும் தெரிவித்துள்ளார். (ஓ)

## அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அராலி குடிநீர் விநியோகத் திட்ட மேம்பாடு அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சி. சுந்தரேஸ்வரன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கி மனிதவள பிரதிப் பொது முகாமையாளர் ஜே. ஆர். பி. எம். பாய்வா கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் க. கணேஷ் சிறப்பு விருந்தினராக தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அதிகார சபை உதவிப் பொது முகாமையாளர் வடக்கு தி. பாரதிதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் திட்டப் பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்தல் திட்ட அங்குரார்ப்பணம் ஆகியனவும் இடம்பெறும். (ஓ)

# மக்களின் ஏகோபித்த பலத்துடன் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம்

## கண்டனக்கூட்டத்தில் ரில்வின் சூளுரை

(கொழும்பு)

நாட்டை ஜனநாயகமிக்க நாடாக மாற்ற வேண்டும். ஊழல் மோசடிகள் அராஜகங்கள் நிறுத்தப்படல் வேண்டும். மஹிந்தவை ஆட்சிப்பீடம்ஏற்றியவர்களும்நாமேமக்களின் ஏகோபித்த பலத்துடன் அரசை விரைவில் வீட்டுக்கு அனுப்பப்போவதும் நாமே என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

நீதிமன்றத் தீர்ப்பினை ஏற்று பெற்றோல் விலையைக் குறைக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்குப் பின்னரான கண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை ஏற்று பெற்றோல் விலையைக் குறைக்குமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கான ஜே.வி.பியின் கண்டனப் பேரணி கொழும்பு–ஹைட் பார்க் மைதானத்திலிருந்து ஆரம்பமானது. இவ் வார்ப்பாட்டப் பேரணி பார்லி வீதி, ஆர்னல் இரத்நாயக்க மாவத்தை ஊடாக லிப்டன் சுற்று வட்டத்தை வந்தடைந்தது.

சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கலந்துகொண்ட இப்பேரணியில் நீதிமன்றத் தீர்ப்புக்குத் தலை வணங்கு, எண்ணெய் விலையை உடனே குறை, இலங்கையின் நீதித்தாயை இந்த அரசு சாவுமணி அடித்துக்கொள்கிறது, நாசமான மிகின் ஏயாருக்குப்பதிலாக மக்களுக்கு நிவாரணம் வழங்கு,ஒழுக்க விதிகளை மீறி மக்களின் தலையில் சுமைகளை ஏற்றி பாடுபடுத்தும் மஹிந்தவின் துஷ்ட அரசு,உலக சந்தையில் எண்ணெயின் விலை 36 டொலர் ,ஆனால் இலங்கையிலோ பன்மடங்கு இது போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதை களை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

அத்துடன் சேகரிக்கும் வரிப்பணத்திற்கு என்ன நடக்கிறது. உண்மையைச் சொல்லு பொய் களவுகளை நிறுத்தி மக்களுக்கு சகாயம் வழங்கு, ராஜபக்ஷ நீ முதலில் நீதிமன்ற சட்டத்துக்குத் தலைவணங்கு, மக்கள் மீது விதித்துள்ள வரிச் சுமைகளை உடனடியாகக் குறை, மஹிந்தவின் ஆட்சியைத் தொடரவிட மாட்டோம், பதில் கூறாத ஆட்சியை மக்களே! வீட்டுக்கு அனுப்பி வைப்பர்.

அதிகரித்த விலைவாசியை உடனே குறை, முழு உலகிலும் விலைவாசி குறைந்து செல்கையில் இங்கு மட்டும் வானளாவ உயர்ந்து செல்கிறது. போன்ற கோஷங்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர் பெருவாரியான முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றில் அரசுக்கு எதிரான வாசகங்கள் தாங்கிய பதாகைகள் பொருத்தப்பட்டிருந்தன.

அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களுடன் சுமார் ஒன்றரை மணித்தியாலங்களுக்குப் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் லிப்டன் சுற்று வட்டத்தை வந்தடைந்தனர். அதன் பின்னர் நடைபெற்றகண்டனக்கூட்டத்தில் அவர்தொடர்ந்து உரையாற்றுகையில் எமது நாடு ஜனநாயக மிக்க நாடாக மாற வேண்டும். இங்கு இடம் பெறும் ஊழல் மோசடிகள் அராஜகங்கள் யாவும் நிறுத்தப்பட வேண்டும் இதற்கா கவே இம்மா பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நாம் தற்போது நடத்தி முடித்துள்ளோம்.

எண்ணெய்யின் விலையைக் குறைத்து அதிகரித்த விலைவாசிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் படி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள போதிலும் மஹிந்த அரசும் அவர்களது சக பாடிக ளும் அதற்குச் செவி சாய்க்காமல் தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டிலேயே உள்ளனர். நீதி மன்றத் தீர்ப்பினைப் புறக்கணித்து மக்களைத் தொடர்ந்தும் திண்டாட்டத்தில் ஆழ்த்தவே இந்த மிலேச்சதிகார அரசு முனைகிறது.

மஹிந்தவை ஆட்சிப்பீடம் ஏற்றியவர் களும் நாமே, அவரை மிகவிரைவில் மக்களின் ஏகோபித்த பலத்துடன் வீட்டுக்கு அனுப்பப் போவதும் நாமே.

வடக்கில் இடம்பெறும் யுத்தத்திற்கு ஜே.வி. பியினர். தடையாகவுள்ளனர் என ஒரு சில அமைச்சர்கள் கூறி வருகின்றனர். நாம் யுத்தத்திற்கு தடையாகச் செயற்படவில்லை பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு, இந்த நாட்டில் ஜனநாயகம் ஏற்படுத்தப்பட்டு இதய சுத்தியான ஆட்சி மலர வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

உலகச் சந்தையில் எண்ணையின் விலை அதிகரிக்கும் போது,தாமும் அதிகரிக்க வேண்டி ஏற்படும். அதுபோலவேத அதன் விலை உலகச் சந்தையில் குறைவடையும் போது நிச்சயமாகத் தாமும் விலையைக் குறைப் போம் என மக்களுக்கு வாக்குறுநுதி வழங்கிய ஜனாதிபதி இன்று தான் வழங்கிய வாக்குறுதியை மறந்து செயற்படுகின்றார்.

உலகிலேயே இடம்பெறாத கசப்பான சம்பவங்கள் மஹிந்த ஆட்சியின் மூலமாக இடம் பெறுகின்றது. ஒரு முறை இடம்பெற்ற பரீட்சையை மீண்டும் இரண்டாம் முறை எழுத வைத்து மாணவ சமூகத்திற்கு சுமையாக இந்த அரசு செயற்படுகிறது.

மறுபுறம் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகிறார்கள். இவையாவும் இலங்கை அரசியல் சரித்திரத்தில் கூட இதுவரை இடம்பெறாத சம்பவங்களாகும். மிகின் ஏயாருக்கு கோடிக் கணக்கில் பணம் செலவிடும் அரசு யுத்த களத்தில் தம்மை அர்ப்பணிக்கும் முப்படையினரும் அவர்களதுகுடும்பங்களையும் பாராமுகமாகவே இருக்கிறது.

இந்நாட்டு மக்கள் தொடர்ந்தும் விலைவாசியால் அவதியுறுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது இது தொடர்கதையானால் மக்களுடன் கைகோர்த்து மாபெரும் போராட்டங்களில் நாம் இறங்கவேண்டி நேரிடும். (ஓ-6)

## இரண்டாயிரத்தி எட்டுக்கு இறுதி அஞ்சலி

மறந்த நாட்கள் மனதில் இல்லை
அறுந்த தாலி கணக்கில் இல்லை
இரவு வந்தால் உறக்கம் இல்லை
இருந்த உறவின் தொடர்பு இல்லை
மனித உயிர்க்கோ மதிப்பு இல்லை
கதறிய போதிலும் கனிவு இல்லை
அருகிய பொழுது இரவினில் இல்லை
திருட்டு நடப்பதை தடுப்பார் இல்லை
வருந்தி உழைப்பது வாழ்வுக்கு இல்லை
அருந்திய உணவில் அறுசுவை இல்லை
பருகிடும் பாலோ தாயிடம் இல்லை
உருகிட தந்தை உயிருடன் இல்லை
நெருடிய நினைவால் நிம்மதி இல்லை
வாழும் வாழ்வில் அர்த்தம் இல்லை
இங்குள கதைகள் சினிமாவில் இல்லை
வளம் கொளிக்கும் நிலத்தில் பயிரில்லை
கடலில் இறங்க தொழிலோ இல்லை
உடலில் வலுவிருக்க உழைப்பும் இல்லை
பயணம் தொடர்ந்திட பாதையும் இல்லை
சமாதான வாழ்வுக்கு சாதகம் இல்லை
அமெரிக்க அரசின் அனுபவமும் இல்லை
அழிந்த தேசங்கள் அடங்கிய தில்லை
ஒழிந்த ஜப்பான் முடங்கிய தில்லை
கும்பிட்ட தெய்வம் கேட்காமல் இல்லை
இல்லாமை தந்த ஆண்டே இறுதியில்
நிஷா வெள்ளம் போல் வழிந்தோடி
இல்லாமல் சென்றுவிடு– இன்றுடன்
புத்தாண்டு மலர வழிவிட்டு நின்று விடு...

ச. நடராஜா
இலங்கை வங்கி யாழ்ப்பாணம்.


அன்பு வாசகர்களே!

வலம்புரியின் புத்தாண்டு வாழ்த்துக்கள் உங்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.

2009 புதிய ஆண்டின் பிறப்பில்

வலம்புரியின் 10ஆவது ஆண்டில்

தாராளமான விளம்பரச்சலுகைகள் இதோ!

- 20% விளம்பரக் கட்டணக் குறைப்பு
- இரண்டு தடவைகள் தொடர்ச்சியாகச் செய்யப்படும் விளம்பரங்களுக்கு மூன்றாவது தடவை முற்றிலும் இலவசம்
- மரண அறிவித்தல்களுக்கு 31ஆம் நாள் நினைவஞ்சலி இலவசம்
- ஞாயிறு தோறும் திருமண விளம்பரங்கள் (திருமணத்தரகர்கள் தவிர்ந்த) இலவசம்

இதைத்தவிர உங்கள் அபிமானத்திற்குரிய வலம்புரியில்

வடக்குமாகாணக் கல்வி அமைச்சின்

- 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்
- க.பொ.த.(உயர்) தர பரீட்சை வினாத்தாள்கள்
- தரிசனம்
- குருஷேத்திரம்
- அறிவுக்கலசம்
- அரசியல்
- ஆய்வியல்
- மீள்பார்வை

இன்னும் பற்பல வாசிக்கத் தவறாதீர்கள்.

# பங்களாதேஷ் பொதுத்தேர்தலில் ஷேக் ஹசீனா அமோக வெற்றி

(தாகா)

பங்களாதேஷ் பொதுத்தேர்தலில் ஷேக் ஹசீனா அமோக வெற்றி பெற்றார். பங்களாதேஷில் பெரும் எதிர்பார்ப்புக்கு இடையே ஏழு ஆண்டு இடைவெளிக்கு பின் நேற்று முன்தினம் பொதுத்தேர்தல் நடந்தது.



தேர்தலையொட்டி வரலாறு காணாத அளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. 50 ஆயிரம் இராணுவ வீரர்கள் உட்பட ஆறு இலட்சம் பாதுகாப்புப் படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டனர். மொத்தம் 300 இடங்களுக்கான தேர்தலில் ஆயிரத்து 552 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

முன்னாள் பிரதமர்கள் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்கும் கலிதா ஜியா வின் பங்களாதேஷ் தேசிய கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

சில இடங்களில் வன்முறையில் ஈடுபட்ட அரசியல் கட்சியினர் கைது செய்யப்பட் டனர். தாகா ஆதம்ஜி கல்லூரி வாக்குச் சாவ டியில் வாக்குப் போட்ட ஷேக் ஹசீனா எதிர்க் கட்சியினர் பெருமளவில் கள்ள வாக்குப் போடுகின்றனர். குறிப்பாக மேற்கு சுவதான்கா நோய கலி ஆகிய பகுதிகளில் அதிகளவில் முறை கேடு நடந்துள்ளது. இருந்தாலும் எங்கள் கூட்டணி தான் வெற்றி பெறும் என்றார். தாகா சிட்டி கல்லூரியில் அமைக்கப்பட்டு இருந்த வாக்குச் சாவடியில் காலிதா ஜியாவாக்குப் போட்டார்.

வாக்குப் பதிவு முடிந்ததும் உடனடியாக வாக்கு எண்ணும் நடவடிக்கை துவங்கியது.

ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி 221 இடங்களை பெற்று அமோக வெற்றி பெற்றது. காலிதா ஜியாவின் பங்களாதேஷ் தேசிய கட்சிக்கு வெறும் 29 இடங்கள் மட்டுமே கிடைத்தது. இவைதவிர ஜாத்தியா கட்சிக்கு 27 இடங்களும் பங்களாதேஷ் ஜமாத் இ-இஸ்லாமிய கட் சிக்கு 27 இடங்களும் மற்ற கட்சிகளுக்கு 11 இடங்களும் கிடைத்தது. இதன் மூலம் பங் களாதேஷில் கடந்த இரண்டு ஆண்டுகளாக இராணுவ ஆதரவுடன் நடக்கும் இடைக்கால ஆட்சி முடிவடைந்து ஷேக் ஹசீனா தலை மையில் மீண்டும் ஜனநாயக ஆட்சி மலரும் சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. (ஓ-6)

# உலகின் மிகவும் பாரமான கேக்

## ரோமானிய சமையல் கலை நிபுணர்களின் சாதனை



281கிலோகிராம் நிறையுடைய உலகின் மிகப் பாராமான கேக்கைத் தயாரித்து ரோமா மற்றும் ரோமானிய புகாரெஸ்ட் சமையல் கலை நிபுணர்கள் புதிய சாதனை படைத்துள்ளனர்.

392மீற்றர்நீளமான உலகிலேயே மிக நீண்ட இறைச்சி உணவைத் தயாரித்து சாதனையொன்றை நிறைவேற்றியதற்கு மறுநாள் பு காரெஸ்ட் நகரில் புதிய சாதனையாக இந்தக் கேக் தயாரிப்பு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பழங்கள் மற்றும் கிறீம்களை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய மற்றும் ரோமானிய கொடி உருவ அலங்காரத்துக்கு மத்தியில் ஹப்பி நியூ இயர் 2009 (மகிழ்ச்சிகரமான புத்தாண்டு (2009)என்ற எழுத்துருக்கள் பொறிக்கப்பட்டு கண்ணைக்கவரும் வகையில் இந்தக் கேக் உருவாக்கப்பட்டிருந்தது.

மேற்படி கேக் தயாரிப்பு கின்னஸ் உலக சாதனைப் பிரதிநிதிகளால் அவதானிக்கப்பட்டு உ லக சாதனையாக பதிவு செய்யப்பட்டது.

இந்த உலக சாதனைப் பதிவுக்கான சான்றிதழ் புகாரெஸ்ட் நகர மேயர் ஸொரின் ஒப்ரெஸ்குவிடம் கையளிக்கப்பட்டது.

தயாரிக்கப்பட்ட கேக் நூற்றுக்கணக்கான புகாரெஸ்ட் நகர வாசிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புகாரெஸ்ட் நகரில் 3 ஆயிரத்து 939 பேர் நத்தார் தாத்தா வேடத்தில் தோன்றி ஒரே சமயத்தில் பரிசுகளை வழங்கி உலக சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# நதிக்கு அடியில் நீண்ட பாதை சீனாவில் திறக்கப்பட்டது

(பீஜிங்)



சீனா உகான் நகரின் போக்குவரத்து நெருக்கடியை குறைக்க மிகப் பெரிய யாங்சி நதிக்கடியில் 1400 கோடி ரூபாய் செலவில் 3.63 கி.மீ. நீளமுடைய குகைப் பாதையை கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்துள்ளதாக அந்நாட்டு பத்திரிகைகள் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள் ளன.

இது குறித்து பத்திரிகை செய்தியில் கூறியிருப்பதாவது சீனா யாங்சி நதிக்கடியில் அமைந்துள்ள முதல் குகைப்பாதையை ஞாயிற்றுக்கிழமை திறந்தது.

இப்பாதை நான்கு வழிச்சாலையாக 3.63.கி.மீ தூரம் அமைந்துள்ளது. நகரின் கிழக்கு கடற்கரை பகுதியில் இருந்து வர்த்தக நகரான ஹொங்கோவிற்கு செல்வதற்கு முன்பு 30 நிமிடங்கள் ஆனது. தற்போது இந்தப் பாதை மூலம் ஏழு நிமிடங்களுக்குள் ஹொங்கோ சென்றடைய முடிகிறது. சீனா வரும் 2010ஆம் ஆண்டு கிழக்கு ஜியாங்சூ பகுதியின் தலைநகரான நான்ஜிங் நகருக்கும் பொருளாதார தலைநகரான ஷாங்காய் நகருக்கும் யாங்சி நதிக்கடியில் மேலும் இரண்டு இரும்புப் பாதைகள் அமைக்க திட்டமிட்டுள்ளது.

மேலும் 8 ஆயிரத்து 400 கோடி ரூபாய் செலவில் ஷாங்காய் நகரை நிங்போ நகருடன் இணைக்கும் உலகிலேயே மிகப் பெரிய கடல் மேம்பாலத்தை மே மாதம் திறக்கவுள்ளது இவ்வாறு அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)

# இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு உரிய நேரத்தில் நடவடிக்கை

## ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்



(கோவை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கும் என்று மத்திய இணை அமைச்சர் ஈ.வி. கே. எஸ். இளங்கோவன் தெரிவித்தார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் தெரிவித்ததாவது,

இலங்கைத் தமிழர் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது. இப் பிரச்சினையில் உரிய நேரத்தில் மத்திய அரசு தேவையான நடவடிக்கையை எடுக்கும்.

தீவிரவாதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழக முதல்வர் எச்சரித்துள்ளது வரவேற்புக்குரியது. அதோடு ஆதரித்துப் பேசியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார். (ஓ-6)

# சவூதி அரேபியாவில் வேலை தேடிச் சென்ற 30 பேர் நாடு திரும்பி உள்ளனர்

சவூதி அரேபியாவில் தொழில் வாய்ப்பு தேடிச் சென்று பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து தற்காலிக முகாம்களில் தங்கியிருந்த 30 இளைஞர்கள் நேற்று நாடு திரும்பி உள்ளனர்.

சவூதி அரேபிய வானூர்தியின் மூலம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்களுள் 2 பெண்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இவர்களை பாதுகாப்பாக இலங்கைக்கு அழைத்து வந்து அவர்களது வீடுகளுக்கு அனுப்புவதற்கான நிதியுதவிகளை இலங்கை வேலை வாய்ப்பு பணியகம் வழங்கியுள்ளது. (ஓ-4)

## வருட இறுதி ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் வருடாந்த இறுதி ஒன்று கூடல் இன்று புதன்கிழமை காலை 8.30மணிக்கு பிரதேச சபை செயலாளர் எம். சாந்தசீலன் தலைமையில் நல்லூர் பிரதேச சபையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்திரனராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. மதுமதி. வசந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-10)

## புதுவருட ஆராதனை

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றை தேவசபை (அசெம்பிளி ஒவ்கோட்) நவீன சந்தையிலுள்ள ஜெபநேசர் மண்டபத்தில் புதுவருட ஆராதணைகள் இம் முறை நடை பெறாது எனவும் யாழ்ப்பாணத்தில் இராசாவின் தோட்ட வீதியிலுள்ள தேவ சபை ஆல யத்தில் நடை பெறவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கத்தோலிக்கத் திருச்சபையின் புத்தாண்டு திருப்பலி முதலாம் திகதி வியாழக்கிழமை காலை.6.30 மணிக்கு புனித மரியாள் ஆலயத்தில் நடை பெறவுள்ளது இறைமகன் யேசுவின் அன்னை புனித மரியாளின் பெரு விழா என்பது குறிப்பிடத்தக்கது (ஓ-72)

# மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகம் ஆரம்பம்

யாழ். குடாநாட்டு பாடசாலை மாணவர்களுக்கான 2009 ஆம் கல்வி ஆண்டிற்கான இலவச சீருடை விநியோகத்தை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று ஆரம்பித்து வைத்தார்.

யாழ். அமைச்சு அலுவலகத்தில் நடை பெற்ற இந்த வைபவத்தின் போது யாழ். குடாநாட்டு பாடசாலைகளுக்கான விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இராசயனப் பொருட்கள் என்பவையும் அமைச்சரால் கையளிக்கப்பட்டன.

அதே நேரம் யாழ். குடாநாட்டு கல்வித் துறை சார்ந்த ஒரு சில கோரிக்கைகளும் வலயக் கல்விப் பணிப்பாளர்களால் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டன.

இவர்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் யாழ். குடாநாட்டில் கல்வித்துறை தொடர்பாக ஆராய்வதற்கென வெகுவிரைவில் உயரதிகாரிகளைக் கொண்ட உயர்மட்ட மாநாடொன்றைக் கூட்டத் தான் ஏற்பாடு செய்து வருவதாகவும் இம் மாநாட்டின் போது குடாநாட்டின் கல்வித்துறை தொடர்பான குறைபாடுகள், தடைகள், தேவைகள் குறித்து அத்துறை சார்ந்த அனைவரும் தங்களது கருத்துக்களை முன்வைக்க முடியும் என்றும் தெரிவித்ததுடன் குடாநாட்டின் கல்வித்துறை சார்ந்த பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க இம் மாநாடு பெரும் உதவியாக அமையும் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஓ

## 'மக்களை நோக்கி' நிகழ்வின் மூலம் மக்கள் பயனடைவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் மக்களை நோக்கி என்னும் தொடர் நிகழ்வின்மூலம் பலர் பயனடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக கடந்த திங்கட்கிழமை கல்வியங்காடு நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்ட சேவைகளில் ஆதனவரி பெயர் மாற்றம், கட்டட விண்ணப்பம் என்பன பற்றிய சேவைகளும்,ஆயுள் வேத வைத்திய அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்ட சிறு நீர்ப்பரிசோதனை, குருதி அமுக்கப் பரிசோதனை மற்றும் ஏனைய உடற் பயிற்சி பரிசோதனைகளும் அங்குள்ள மக்களுக்கு பெரும் பயனாக அமைந்ததெனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இது போன்ற மக்களை நோக்கிய தொடர் நிகழ்வு ஏனைய பிரதேசங்களிலும் நடத்தப்படவுள்ளதாகநல்லூர் பிரதேச சபை செயலாளர்.எம். சாந்தசீலன் தெரிவித் துள்ளார். (ஓ-10)

# 2009 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?

## கடகம்

2009ஆம் ஆண்டில், இதுவரை உங்களைச் சுற்றி நிகழ்ந்த சில சதிச் செயல்களிலிருந்து ஆபத்தின்றி தப்பித்துவிடுவீர்கள். மேலும் வம்பு வழக்குகளிலிருந்து கடைசி தருணத்தில் காப்பாற்றப்படுவீர்கள். குரு பகவானின் அருட்பார்வை உங்கள் ராசியின் மீது படிவதால் உடல் நலன் நன்றாக இருக்கும். எதையும் நிதானத்துடனும், பொறுமையுடனும் செய்து சிறப்பாக முடித்துவிடும் ஆற்றல் உண்டாகும். மத விஷயங்களில் அதிக ஈடுபாடு உண்டாகும். பெரியோர்களின் உன்னதமான தத்துவங்களைக் கேட்டு உங்களின் ஆன்மீக அறிவைப் பெருக்கிக்கொள்வீர்கள்.

அதேசமயம் ராசியில் உள்ள கேது பகவான், உங்களின் செயல்களில் சிறிது கவனக் குறைவையும் சில ஆடம்பரச் செலவுகளைச் செய்ய வைத்து பொருள் விரயங்களையும் உண்டாக்குவார். எனவே வறட்டு ஜம்பங்களுக்கு இடம் கொடுக்காமல் நடந்துகொள்ளவும்.

மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை தனஸ்தானத்தில் பலமாக அமர்ந்துள்ள சனி பகவானை குரு பகவான் பார்ப்பதால் உங்களின் திறமைகளை நன்கு வெளிப்படுத்துவீர்கள். திட்டமிட்ட செயல்களை சரியாக முடித்து விடுவீர்கள். சுய தொழிலில் சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். இளைய சகோதர, சகோதரிகளின் உதவிகளைப் பெறுவீர்கள். குடும்பத்தில் வசதிகள் அதிகரிக்கும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களைக் கண்டறிந்து விலக்குவீர்கள். அநாவசியமான செலவுகள் உண்டாகாது. மேலும் மனத்தில் இருந்து தீய எண்ணங்கள் மறைந்து நேர்மையாகச் சிந்திக்கத் தொடங்குவீர்கள். ஒகஸ்ட் மாதம் உங்களின் சுறுசுறுப்பும் ஊக்கமும் அதிகரிக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்துவீர்கள். மார்பு, இதயம் நுரையீரல் சம்பந்தப்பட்ட உபாதைகளால் கஷ்டப்பட்டவர்கள் பிணி விலகி ஆரோக்கியம் பெறுவார்கள்.

செப்ரெம்பர் மாதத்திலிருந்து தைரியஸ்தானத்தில் சுபமாக அமர்ந்துள்ள சனி பகவானை குருபகவான் பார்வையிடுவதால் வழக்குகளில் நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். பண வரவு அதிகரிக்கும் சகோதர, சகோதரிகளுடன் இருந்த பிணக்குகள் மறையும். அலைந்து திரிந்து செய்த வேலைகள் சுலபமாக முடிவடையும். கடன் தொல்லைகள் இருக்காது. வெளியூர் அல்லது வெளிநாடு செல்லத் திட்டமிட்டவர்கள் அதற்கான சந்தர்ப்பம் வரக்காண்பார்கள் தர்மசங்கடத்திற்கு உட்பட்டு பிரிய முடியாமல் தவித்த தகாத நட்புகளில் இருந்து உங்களை குரு பகவான் விடுவிப்பார்.

உத்தியோகத்தர்களுக்கு இந்த ஆண்டு வேலையில் திருப்பு முனை ஏற்படும். உங்கள் பணிகளை விருப்பு வெறுப்பின்றி செய்வீர்கள் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் அனைத்து இடையூறுகளையும் தாண்டி வந்துவிடுவீர்கள். அலுவலக ரீதியான பயணங்களால் நன்மை உண்டாகும். விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும். பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்புகள் தேடி வரும். அலுவலகத்தில் உங்கள் பெருமை உயரும். வியாபாரிகள் தேவைக்கேற்ற பொருட்களை வாங்கி விற்பனை செய்வீர்கள் சந்தையில் போட்டிக்கு ஏற்றவாறு விலையை நிர்ணயித்து நஷ்டங்களில் இருந்து தப்புவீர்கள்.

அதே சமயம் புதிய முதலீடுகளை கூட்டாளிகளை ஆலோசித்த பிறகே செய்யவும். பழைய கடன்களை வசூலித்த பின்பே புதிய கடன்களைக் கொடுக்கவும். விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். விவசாய இடுபொருட்களை குறைந்த விலையில் வாங்குவீர்கள். எதிரிகளின் தொல் லைகள் மறையும். புதிய குத்தகைகளை நாடிப் பெறுவீர்கள். ஒவ்வொரு வருமானத் திற்காக காய், கனிகளை பயிரிடுவீர்கள். புதிய கால் நடை வாங்குவீர்கள்.

அரசியல் வாதிகள் எந்தச் செயலையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து வெற்றிகரமாக செய்து முடித்துவிடுவீர்கள். முக்கியமான பயணங்களை மேற்கொண்டு காரிய அனுகூலங்களைப் பெறுவீர்கள். இந்த ராசி கலைத்துறையினருக்கு எதையும் சாதிக்கும் அளவுக்கு தன்னம்பிக்கை பலிச்சிடும். உங்களின் நெடுநாளைய கனவுகள் சக கலைஞர்களின் உதவியுடன் நனவாகும். பரிசுகளும் பாராட்டுகளும் கிடைக்கும் பொருளாதார நெருக்கடி என்ற பேச்சுக்கே இடமில்லாமல் பணப்புழக்கத்துடன் இந்த ஆண்டு அமையும்.

பெண்மணிகள் கணவரிடமும் குடும்பத்தாரிடமும் நல்ல பெயர் வாங்குவர். உடல் நலம் சீராக இருக்கும் உறவினர்களும் சிநேகிதிகளும் உங்களுக்கு உதவிகளைச் செய்வார்கள். ஆடை, ஆபரணங்களை வாங்கி

ஜோதிடர் கே.சி.எஸ். ஐயர்

மகிழ்வீர்கள் குடும்பத்தின் தேவைகள் பூர்த்தியாகும்.

மாணவ மணிகளை பொறுத்தவரை வீண் வம்புகளிலும் வாக்குவாதங்களிலும் ஈடுபட வேண்டாம். பழைய தவறுகளைத் திருத்திக்கொண்டு புத்துணர்ச்சியுடன் பாடங்களை படியுங்கள். உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து தாழ்மையுணர்ச்சி அடைய வேண்டாம். நீங்கள் நீங்களாகவே இருக்க பழகிக்கொண்டு உங்கள் முன்னேற்றத்திற்கு அடிகோலுங்கள். உங்களை நீங்கள் உயர்த்திக்கொள்ள வேண்டும்; தாழ்த்திக்கொள்ளக்கூடாது என்கிற பொன்மொழியை மனதில் கொண்டு இந்த புத்தாண்டை வரவேற்கத் தயாராகுங்கள்.

பரிகாரம்

ஞாயிற்றுக்கிழமைகளில் சிவபெருமானை வழிபட்டு வர நலன்கள் கூடும்.

*(வளரும்)*

## தொழில் நுட்பக் கல்லூரிகளில் தமிழ் மொழி மூல பயிற்சி நெறிகள்

(கொழும்பு)

நடளாவியரீதியாக இயங்கும் தொழில் நுட்பக்கல்லூரிகளில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய தொழில் நுட்பக்கல்லூரிகளின் போதனைகள் தமிழ் மொழியில் இடம்பெறுவதில்லை என அகில இலங்கை இந்துமாமன்றம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

தமிழ் மொழிமூலமான போதனைகள் இடம்பெறாததால் தமிழ் மொழி மூல மாணவர்கள் பயன்பெற முடியாதுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் வழங்கப்படும் பயிற்சிகளில் தமிழ்மொழி மூலமான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும் அகில இலங்கை இந்து மாமன்றம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக வாழ்க்கைத்தொழிற்பயிற்சி அமைச்சின் பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக தமிழ் மொழி மூலமாக பண்டாரவளை, பதுளை, நுவரெலியா, ரட்ணபுர, கண்டி, மாத்தறை ஆகிய பிரதேசங்களில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பயிற்சி நெறியை பயில விரும்புபவர்கள் மேற்குறிப்பிட்ட தொழில் நுட்பக்கல்லூரிகளின் அதிபர்களைச் சந்தித்து பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

தொழிற்பயிற்சி அதிகார சபை மூலமாக நுவரெலியாவில் தொழிற்பயிற்சி கல்லூரி ஒன்று தமிழ் மொழி மூலமாக ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் விரைவில் அனைத்துப் பிரதேசங்களிலும் பயிற்சிக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித் தார். (ஓ)

## இராணுவத்தில் வயது குறைந்தவர்களை இணைத்துக்கொண்ட வரலாறு இல்லை

### இலங்கை இராணுவத்தினர் அறிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தில் வயது குறைந்தவர்களை இணைத்துக்கொண்ட வரலாறு எதுவும் இல்லை என இலங்கை இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இலங்கை இராணுவத்தினர் மோதல்களுக்கு வயது குறைந்தவர்களை அனுப்புவதாக விடுதலைப்புலிகளை மேற்கோள் காட்டி வெளியான தகவல்களை மறுத்திருக்கும் தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் இராணுவத்தினருக்கு ஆட்களை சேர்ப்பது பற்றி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளது.

இராணுவத்திடம் ஆட்பற்றாக்குறை இல்லை 2008ஆம் ஆண்டு இராணுவத்தில் 48ஆயிரத்து 922 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

வயது குறைந்தவர்களை சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவை இராணுவத்திற்கு இல்லை என தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தின் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் வன்னி மோதல்களில் கொல்லப்பட்ட இராணுவத்தினரிடமிருந்து மீட்கப்பட்ட அடையாள அட்டைகளில் 91ஆம் ஆண்டு பிறந்தவர்களின் அடையாள அட்டைகளும் உள்ளடங்குவதாக சில இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஓ-6)

## வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

சென்றவாரத் தொடர்ச்சி...

### இஞ்சி

மருத்துவப்பயன்கள்

✠ முதலில் இஞ்சிச் சாற்றை 10 மி.லி அளவில் தொடங்கி நாள்தோறும் 5 மி.லி



அளவு அதிகரித்து அருந்திவர வேண்டும். இவ்வாறு தொடர்ந்து 10 நாட்கள் அருந்தும் போது 50.மி.லி. அளவு வரும். திரும்ப 5.மி.லி. அளவு குறைத்துக்கொண்டேவர வேண்டும். கடைசி நாள் 5.மி.லி அளவோடு வரும் போது நிறுத்தி விட வேண்டும். இதனால் தொந்தி கரையும். உடலிலுள்ள அதிகளவு பித்தநீர் குறையும்.

✠ புளித்த ஏப்பம், பசியில்லாமை இவற்றை போக்க இஞ்சிச் சாற்றுடன் சிறிதளவு மிளகுத் தூள், சிறிதளவு சீரகம் ஆகியவற்றைக் கலந்து சாப்பிட வேண்டும்.

✠ தெளிந்த இஞ்சிச்சாறு, வெங்காயச் சாறு, தேன் ஆகிய மூன்றிலும் ஒவ்வொரு தேக்கரண்டி கலந்து நாள்தோறும் மூன்று வேளை அருந்தி வந்தால் எல்லாவகை இருமல் நோய்களும் குணமாகும்.

✠ மாதுளம்பழச்சாறு, தேன், இஞ்சிச்சாறு சம அளவு கலந்து அருந்துவதனால் இருமல், ஆஸ்மா குணமாகும்.

✠ இஞ்சியை இடித்துப் பிழிந்து 500 கிராம் சாறு எடுத்துக்கொள்ள வேண்டும். 500 கிராம் சீனியை சிறிது தண்ணீரில் கலக்கி அதில் மேற்கண்ட இஞ்சிச்சாற்றை கலந்து அடுப்பில் வைத்து சர்பத் பதமாகக் காய்ச்சி எடுக்க வேண்டும். இதில் ஒரு தேக்கரண்டி அளவு குழந்தைகட்கும், இரண்டு முதல் மூன்று தேக் கரண்டி அளவு பெரியவர்கட்கும் கொடுக்கலாம். இதனால் சீரண சக்தி பசி ஏற்பட்டு வாய்வு கலையும்.

இதேபோல சீனிக்கு பதில் பனைவெல்லம் எனும் கருப்பட்டியைச் சேர்த்து அல்வா போலக் கிண்டி எடுத்து ஆறியதும் வில்லைகளாக நறுக்கி வைத்துக்கொண்டு பயன் படுத்தலாம். இதுவும் மேற்சொன்னபடி பயன் தரும்.

✠ இஞ்சியை பால் ஊற்றி அரைத்து பசும் பாலில் ஒரு தேக்கரண்டி அளவு கலந்து காலை, மாலை நாற்பது நாட்கள் அருந்துவதனால் குடல் அழற்சி, வயிற்றுப்புண் வாய்வு இவை குணமாகும்.

✠ இஞ்சியின் மேலுள்ள தோலை நீக்கி விட்டுச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். துண்டு துண்டாக நறுக்க வேண்டும் இத் துண்டுகளை தேனில் ஊற வைக்க வேண்டும். இப்படி மூன்றுமாதகாலம் ஊற வேண்டும். அதன்பிறகு அதில் 10 கிராம் அளவு

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

எடுத்து காலை, மாலை சாப்பிட வேண்டும். இதனால், அஜீரணம் பசிமந்தம் மலச்சிக்கல் இவை நீங்கி இரத்தம் சுத்தமாகும். வாய்வுக் கோளாறு நீங்கும். பற்களுக்கு உறுதி ஏற்படும். கண்களில் பார்வைத் தெளிவு ஏற்படும்.

இஞ்சியைத் தோல் நீக்கி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி உப்புடன் கலந்து ஊறப் போட வேண்டும். நாள்தோறும் குலுக்கி குலுக்கி வெயிலில் வைத்து எடுக்க வேண்டும். நன்றாக ஊறியபின் தினசரி ஊறுகாய் போல உணவுடன் சில துண்டுகளைச் சாப்பிடலாம். இதனால் வாத பித்த கபநோய்கள் வராமல் பாதுகாக்கலாம்.

**இஞ்சி சுக்கான பிறகு...**

இஞ்சிக் கிழங்கு காய்ந்து பக்குவப்படுமானால் சுக்காகும். இஞ்சியைவிட சுக்கிற்கு மருத்துவ குணம் அதிகம்.

*(தொடரும்)*

சுயநலம் என்ற நெருப்பானது– முதலில் மற்றைய வர்களைப் புசிக்கிறது – பின்னர் தன்னையே புசிக்கிறது.

– ரஷ்யா

வலம்புரி

## பொறுப்பற்ற செயலால் யாழ்ப்பாணம் அசுத்தமாகிறது

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட நிஷா புயல், மழை காரணமாக மரங்கள் முறிந்ததும், வாழைகள் அழிந்ததும் காரணமாக கழிவுப் பொருட்கள் பெருக்கமடைந்தன.

இலைகள் –வாழைத் தண்டுகள் என எல்லாக் கழிவுகளையும் பொது இடங்களில் போட்டு விடும் பொறுப்பற்ற செயலால் யாழ்ப்பாண மாநகர சபை கதிகலங்கிப் போயுள்ளது.

இந்த அவல நிலைமையை ஏனைய பிரதேச சபைகளும் அனுபவித்து வருகின்றன. குப்பைகளை அகற்ற அகற்ற தொடர்ந்தும் அவற்றைக் குவிப்பது மக்களின் பொறுப்பற்ற செயலாகும்.

உழவு இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்தி குப்பைகளை விரைவாக அகற்றும் பணியில் யாழ்.மாநகர சபை அர்ப்பணிப்புடன் சேவையாற்றியது.

எனினும் அந்தச் சேவையின் பெறுமானத்தை கணிக்க முடியாத வகையில் தொடர்ந்தும் குப்பை கூழங்கள் வீதிகளில் போடப்படுகின்றன.

இந்நிலைமை தொடருமாக இருந்தால் யாழ்ப்பாணத்தில் தொற்று நோய்களே தலைவிரித்தாடும்.

எனவே பொதுமக்கள் ஓரளவேனும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இதற்கு மேலாக யாழ்.மாநகர சபையும் ஏனைய பிரதேச சபைகளும் கழிவுப் பொருட்களை வீதியில் போடுவதை முற்றாக தடை செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட இடங்களைத் தெரிவு செய்து அங்கு குப்பைகளைப் போடலாம் என்ற எண்ணப்பாடு மக்களிடம் ஏற்பட்டதாலேயே இன்று வீதியெங்கும் குப்பைகள் கொட்டப்படுகின்றன.

இந்த மோசமான நிலையைத் தடுக்க வீடுகளில் குப்பைகளை சேகரிக்கும் வசதியை மாநகர சபை மற்றும் பிரதேச சபைகள் ஏற்படுத்திக் கொடுப்பதும் அதற்காக நியாயமான கட்டணத் தொகை ஒன்றை அறவிடுவதுமான நடைமுறையை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

இதன் மூலம் குப்பைகள் வீதிகளில் போடப்படுவது தவிர்க்கப்படும். அதேநேரம் யாழ்.மாநகர சபையின் வண்டில்களில் சேகரிக்கும் குப்பைகள் குறித்த இடங்களில் குவிக்கப்படுவதும் பின்னர் அங்கிருந்து குப்பைகளை அகற்றுவதுமான நடைமுறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

வண்டிகளில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை குறித்த இடத்தில் போடுவதற்கும் அதனை உழவு இயந்திரத்தின் மூலம் அகற்றுவதற்கும் இடையிலான நாட்கள் அதிகமாக இருப்பதனால்,அதுவே குப்பைகள் போடப்படும் இடமென மக்கள் தெரிவு செய்கின்றனர்.

பாடசாலைகள், பொது நிறுவனங்கள், வீடுகள் எவற்றையும் கிஞ்சித்தும் சிந்தியாது குப்பைகளை கொட்டிவிட்டுப் போகின்றவர்களை அன்பும், அறிவுரையும் ஒருபோதும் திருத்தாது.

இத்தகையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். யாழ்ப்பாணத்தை தூய்மையாக வைத்திருப்பதற்கு –தொற்று நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு குந்தகம் விளைவிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது இறை நீதியாகும்.

இதில் 'நமக்கேன் வம்பு' என்ற விலகல் போக்கு மனித உயிர்களை இழப்பதற்கே வழி வகுக்கும்.


# இந்தியாவின் நிவாரண உதவிகளுக்கு யாழ். ஆயர் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றினை முன்வைக்கும் வரையில் உள்ளக இடம்பெயர்வுகளுக்கு உள்ளானவர்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என இந்திய மத்திய அரசாங்கத்தை யாழ்ப்பாண ஆயர் கோரியுள்ளார். இலங்கையில் உள்ள இந்திய உயர்தானிகர்களுக்கு ஆஜரால் அனுப்பப்பட்டுள்ள கடிதம் ஒன்றிலேயே யாழ்ப்பாண ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கான இந்திய அரசாங்கத்தின் நிவாரணப் பொருட்கள் குறித்து இந்தக் கடிதத்தின் மூலம் தமது நன்றியை அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய அரசாங்கத்தினாலும் தமிழக அரசினாலும் வழங்கப்பட்ட நிவாரணப்பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிரமமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



இந்த நிவாரணப் பொருட்கள் உரிய குடும் பங்களுக்கு ப்பகிர்ந்தளிக் கப்பட்டு வருகின்றமையை கிளிநொச்சி உள்ளிட்ட பிரதேசங்களுக்கு தாம் விஜயம் மேற்கொண்ட போது காணமுடிந்ததாகவும் அவர் தெரி வித் துள்ளார்.

இதன் மூலம் இந்தியா தமது இலக்கை அடைந்த திருப் தியை அடையமுடியும் என அவர் அந்த க்கடிதத் தில்குறிப் பிட்டுள்ளார்.

அத்துடன் இந்த கடிதத்தின் மூலம் தமிழக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த ஆடைகள் குறித்தும் யாழ்ப்பாண ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் நினைவு கூர்ந்துள்ளார். (ஓ)

# எரிபொருளின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கும் அமைச்சரவைக்கும் மட்டுமே

## வேறு எந்த நிறுவனத்திற்குமில்லை என்கிறார் விமல் வீரவன்ச எம்.பி.



(கொழும்பு)

எரிபொருளின் விலை குறைக்கப்பட வேண்டும் என்பதில் தேசிய சுதந்திர முன்னணியிடம் மாற்றுக் கருத்துக்கள் இல்லை எனினும் எரிபொருளின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கும் அமைச்சரவைக்கும் மாத்திரமே இருக்கின்றது. வேறு எந்த ஒரு நிறுவனத்திற்கும் அந்த அதிகாரம் இல்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பி.யுமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விமல் வீரவன்ச எம்.பி. இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

எரிபொருள் என்பது மக்களின் அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்றாகும் உலக சந்தையின் விலை மாற்றத்துக்கு ஏற்ப உள்நாட்டிலும் எரிபொருளின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். இதில் எம்மிடம் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. எரிபொருள் விலையைக்குறைக்க வேண்டும் என்று நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இது இவ்வாறிருக்க எரிபொருளை மையமாக வைத்து ஜே.வி.பி.யும் ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுகின்றன. இதன் வெளிப்பாடுகள் இரண்டு கட்சிகளின் இணக்கப்பாட்டுக்கு ஏதுவானதாக அமைந்திருக்கின்றன.

தேசிய சுதந்திர முன்னணியைப் பொறுத்த வரையில் எரிபொருளின் விலையை நிர்ணயிப்பதும் வரிகளை அறவிடுவதும் பாராளுமன்றத்துக்கே உரிய அதிகாரங்களின் கீழாகும். இதில் வேறு எந்த நிறுவனங்களும் தலையிட முடியாது. தேசிய சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதனால் அரசாங்கத்தின் சகல நிலைப்பாடுகளையும் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம் கொள்ளக்கூடாது. மிகின் ஏயார் நிறுவனம் தொடர்பில் எமக்கு உடன் பாடு இல்லை அது மட்டுமல்லாது ஊழல் மோசடிகள் இல்லாது ஒழிக்கப்படல் வேண்டும் அந்த வகையில் எரிபொருள் விலையும் குறைக்கப்பட வேண்டும் என்பதை நாம் அரசாங்கத்திற்கு வற்புறுத்தியே வருகிறோம்.

எரிபொருள் விலையை காரணம் காட்டி அரசாங்கம் எதிர்கொண்டுள்ள சதித்திட்டங்கள் வெற்றியடைவதற்கு தேசிய சுதந்திர முன்னணி இடமளிக்காது என்றார். (ஓ-6)

# அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிக்கவும்

## ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனாதிபதி கோரிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்தால் நாட்டில் முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத் திட்டங்களுக்கு மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலா ளர்களை கௌரவிக்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இதன் போது கேட்டறிந்து கொண்ட ஜனாதிபதி அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு எதிர்காலத்தில் திட்டங்கள் முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இந்த நிகழ்வில் நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் 300 ஊடகவியலாளர்கள் பங்கேற்றனர். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## பலவீனமே மரணம்



மனிதனில் உள்ள இயற்கை ஆற்றலின் வெளிப்பாடே மதம். அளவிலா ஆற்றல் விசை ஒன்று இந்த சிறு உடலுள் சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சுருள் விரிந்து கொண்டே இருக்கிறது. அது விரிய விரிய ஒன்றன் பின் ஒன்றாகப் பல உடல்களும் போதவில்லை, எனவே அந்த விசை இந்த உடல்களை எறிந்து விட்டு, உயர்ந்த உடல்களை எடுக்கிறது. இதுவே மனிதனின் வரலாறு, மதத்தின் வரலாறு, நாகரீகத்தின் வரலாறு அல்லது முன்னேற்றத்தின் வரலாறு கட்டுண்டு கிடக்கும் அரக்கனான புரோமீதியஸ் கட்டுக்களை அறுத்துக்கொண்டு வருகிறான். அது எப்போதும்ஆற்றலின் வெளிப்பாடு ஜோதிடம் போன்ற விஷயங்களில் ஏதோ கடுகளவு உண்மைஇருந்தாலும் அவற்றை புறக்கணித்தே யாக வேண்டும்.

கிரேக்கப் புராணத்தில் வருகின்ற ஒரு பாத்திரம் அவன் களிமண்ணால் மனிதனைச் செய்து , உயிர் கொடுப்பதற்காகச் சொர்க்கத்திலிருந்து தீயைத் திருடிக்கொண்டு வந்தான். ஜியஸ் என்னும் கடவுள் தலைவன் அவனை ஒரு பாறாங்கல்லில் கட்டிவைத்து, அவனைக் கொத்தித் தின்னுமாறு ஒரு கழுகை ஏவினான் . ஆனால் கழுகுகொத்திய பகுதி இரவில் மீண்டும் வளர்ந்து விடும் . ஹெர்குலிஸ் என்பவன் வந்த கழுகைக் கொன்றுவிடுவிக்கும் வரை புரோமீதிஸ் துன்பப்பட்டான்.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா' 19

மழை இப்படிப் பெய்து கொட்டும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. அத்தகையதோர் எதிர்பார்ப்பிற்கான இயற்கை அறிகுறிகளும் தெரியவில்லை. நீராவியடி, பிறவுண் வீதிப்பகுதியில் லொறிகளில் ஏற்றப்பட்ட புகையிலைச் சிப்பங்கள் மழையில் நனைந்துபோயின.

லொறி நிறுத்தப்பட்டிருந்த இடம் வெள்ளம் தேங்கி சதுப்பாகியமையால் லொறியை மீட்டெடுப்பதும் முடியாத காரியமாயிற்று. இதனால், இரண்டு மூன்று தினங்கள் தாமதித்தே லொறியை மீட்டெடுக்க முடிந்தது.

சிப்பம் கட்டப்பட்டிருந்த பாய்கள் நனைந்த நிலையில் புகையிலைகளும் பளுதடைந்திருந்தன.

புகையில் உலர்த்தி நுகர்வுக்குத் தயாராக இருந்த புகையிலைகள் நனைந்தால் அதன் பாதிப்பு எவ்வாறு இருக்கும் என்பதை புகையிலைச்செய்கையோடு தொடர்பு பட்டவர்கள் நன்கு தெரிந்துகொள்வர்.

புகையிலைகளை உலர வைப்பதற்கு மூன்று நான்கு தினங்கள் கதிரவனின் வரவிற்காக காத்திருந்த சம்பவம் மகாத்மாகாந்தியின் தாய் விரதமிருந்தபோது அன்றைய மப்பு மந்தாரத்தால் சூரியநமஸ்காரம் செய்ய முடியாமல் போன கதையே ஞாபகத்திற்கு வந்தது. எப்படியாவது நனைந்த புகையிலைகளைக் காப்பாற்றும் பணி இடையறாது தொடர்ந்தது.

**கல்வியங்காட்டு வைரவரைக் காப்பாற்ற யாருமில்லை**

இந்து சமயத்தில் எத்தனையோ தத்துவங்கள். அந்தத் தத்துவங்களையெல்லாம் புரிந்துகொள்வது முடியாத காரியம். ஐந்தொழிலில் காத்தல் தொழிலின் பொறுப்பு மகா விஷ்ணு விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.




படம்: ப.ஐங்கரன்

இன்றைய அரசியல் அமைப்பில் கூறுவதாயின் இந்து சமயத்தில் சிவனின் அரசாட்சியில் ஐந்து அமைச்சுகள் மட்டுமே உண்டு. அதில் மூன்று அமைச்சுப் பொறுப்புகளை கூத்தபிரான் (சிவபெருமான்) தன்னிடம் வைத்துக்கொண்டார்

அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய முத்தொழிலுமே அவை.

மிகவும் பொறுப்பான அமைச்சுப் பதவிகளை சிவபெருமான் தன்னிடம் வைத்திருந்ததற்கு நிறைய அர்த்தமுண்டு.

இல்லாதொழிப்பது, எடுப்பது, கொடுப்பது இந்த மூன்று பணிகளிலுமே ஊழலும், மோசடிகளும், தவறுகளும் இடம்பெறும் வாய்ப்புண்டு.

இதனால் அந்த மூன்று பணிகளையும் தன்னிடம் வைத்துக் கொண்ட பரம்பொருள் காத்தலை கண்ணனிடமும், படைத்தலை பிரமாவிடமும் ஒப்படைத்தார்.

காத்தல் கடமையை கண்ணபரமாத்மா செய்யும் அதேநேரம், காவல்காரர்களை சிவனே நியமித்தார். அவர்களில் ஒருவரே வைரவர்.

ஆலமரங்களிலும், அரசமரங்களிலும் இருந்து ஜீவராசிகளுக்கு இடையூறு ஏற்படாமல் பாதுகாப்பது இவரின் கடமையாக வகுக்கப்பட்டது.

அதாவது,தற்கால உலகில் பேசப்படும் காவலரண்கள் அதில் ஆயுதத்துடன் இருப்பவர் போன்ற கட்டமைப்பே வைரவரின் வகிபங்காக இருந்தது.



படம்:எச்.சுனில்

## காவற்கடவுளுக்கு கோயில் கட்டியது தெய்வ நிந்தையா? அதுவே இயற்கையின் சீற்றமா?

இதனாலேயே சிறு தெய்வ வழிபாடு பற்றி இந்து சமயம் பேசுகிறது.நாட்டின் தலைமைக்கு வழங்கக் கூடிய மதிப்பை சாதாரண படைச்சிப்பாய்க்கு வழங்குவது முறை யன்று. எனினும், இத்தத்துவத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் சிறுதெய்வங்களுக்கு கோயில் எழுப்பினர்,தேர் இழுத்தனர், தீர்த்த மாடினர்.

இவையெல்லாம் சிவப்பரம் பொருளின் நிர்வாகக் கட்டமைப்பிற்கு கெடுதி விளைவிப்பதாகும். இதனைவிட வைரவரின் ஆலயத்தில் சிவனை, பிள்ளையாரை, முருகனை பரிவார மூர்த்தியாக பிரதிஷ்டை செய்வது மிகப்பெரும் தவறாகும்.

அதாவது,படைச்சிப்பாய் மேடையில் இருக்க நாடாளும் மன்னன் சபையில் இருப்பது போன்றது. இத்தகைய கௌரவக் குறைப்புகள் தெய்வ நிந்தனையாகும்.

இந்த உண்மையை உணர்த்த வேண்டியவர்கள் அந்தணச் சிவாச்சாரியர்கள். இருந்தும் அவர்கள் தங்கள் நலன் கருதி சிறு தெய்வங்களுக்கு கோயில் எழுப்பி மகாகுடமுழுக்கு நடத்தி வைக்கின்றனர்.

படம்:எச்.சுனில்




ஆலமரத்தில் , அரசமர நிழலில் ஓலைக்கொட்டில்களில் இருக் கவேண்டிய காவல் தெய்வங்களுக்கு கோயில் கட்டி அங்கு வைத்து பூட்டிவிட்டதால், இன்று அரச மரங்களிலும், ஆல மரங்களிலும் படையினர் ஆயுதத்தோடு நிற்கின்றனர்.

இருக்க வேண்டியவர்களை இருக்க வேண்டிய இடத்தில் இருத்தி விடாமல், வைரவருக்கு மாபிள் கட்டடம் கட்டி, மணித்தேரில் ஊர்வலமாய் இழுத்தால் இயற்கை எங்ஙனம் தாங்கிக்கொள்ளும்.

இதனாலன்றோ 200,300 வருடங்கள் பழமை வாய்ந்த அரச மரங்கள் அடியோடு சரிந்தன என்று எண்ணத் தோன்றுவதும் இயற்கையின் சீற்றத்தைத் தடுக்க யாது செய்ய வேண்டும் என்ற கேள்வி நெஞ்சைத் துளைப்பதுமாக இருக்கின்றது.

கல்வியங்காடு சந்தைப்பகுதியில் உள்ள அரச மரம் அடியோடு மாண்டு போனதால் மரத்தின் அடிவாரத்தில் காவலுக்கு அமர்த்தப்பட்ட வைரவரும் பாதிக்கப்பட்டார்.

எனினும், அவரை மீட்பார் எவரும் இல்லாத நிலையில் அங்கிருந்த படையினரே வைரவரின் இருப்பிடத்தை சரிப்படுத்தியதாக அறிய முடிகின்றது.

நிஷாவின் கோரத்தாண்டவத்தில் பலியாகிப்போன அரச மரங்களுக்குக் கீழ் வீற்றிருந்த வைரவர் மற்றும் காவற்தெய்வங்களை மீண்டும் அதே இடத்தில் அமர்த்துவதற்கு முயற்சிகள் எடுப்பது தேவையானதாகும்.

**என்.விஜயன்**

வண்ணை நாச்சிமார் கோயில் பகுதியில் பல வருடங்கள் நிலைத்திருந்த மருதமரம் விழுந்த கையோடு அங்கு வீற்றிருந்த வைரவருக்கு தனியான இடம் அமைக்கப்பட்டுள்ளது.

அதே இடத்தில் மருதமரமும் நாட்டப்படுவது எமது பண்பாட்டுச்சூழலுக்கும், சமயக்கட்டுமானங்களுக்கும் பேருதவியாக அமையும். (வளரும்)

# இரண்டாவது போட்டியிலும் வெற்றி

# தொடரை தனதாக்கியது தென்னாபிரிக்க அணி

# சொந்த மண்ணில் ஆஸி. அணிக்கு மரண அடி

(மெல்போர்ன்)

இரண்டாவது டெஸ்டில் தென்னாபிரிக்கா 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கி வரலாறு படைத்தது.

இதன் மூலம் 16 வருடங்களின்பின் அவுஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்திய பெருமையை தென்னாபிரிக்க அணி பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட்,2 இருபது–20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 26ஆம் திகதி மெல்போர்னில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 394 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 459 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களைமிழந்தது.

இதன் மூலம் 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 247 ஓட்டங்களைமாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.



இதன் மூலம் இரண்டாவது இன்னிங்ஸில் 183 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சிமித்–மக்கன்சி ஜோடியின் முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாக 121 ஓட்டங்களை எடுத்து வலுச் சேர்த்தனர்.

இதில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் சிமித் 94 பந்துகளில் 10 பவுண்டரிகள் அடங்கலாக 75 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அம்லா சிறப்பாக துடுப்பெடுத்தாட மறுமுனையில் மக்கன்சி தனது அரைச்சதத்தை பூர்த்திசெய்தார்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டமாக 62 ஓட்டங்களை எடுக்க தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 183 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட தொடரில் முதலிரண்டு போட்டிகளிலும் வென்று தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

துடுப்பாட்டத்தில் மக்கன்சி 59 ஓட்டங்களுடனும் அம்லா 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர். பந்துவீச்சில் ஹயூறிஸ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இப்போட்டியில் இரு இன்னிங்ஸிலும் தலா 5 விக்கெட்டுக்களை கைப்பற்றியதும் முதலாவது இன்னிங்ஸில் 72 ஓட்டங்களை எடுத்தும் அவுஸ்திரேலிய அணியை பணியச் செய்த தென்னாபிரிக்க அணியின் வேகப் புயல் ஸ்ரையன் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய மண்ணில் முதன் முறையாக தொடரை கைப்பற்றி தென்னாபிரிக்க அணி வரலாறு படைத்தது.

உலகின் நம்பர்–1 அணியாக மார்தட்டிக் கொள்ளும் அவுஸ்திரேலிய அணி இந்த தொடரை இழந்தது மிகப்பெரிய பின்னடைவாகும்.

1992ஆம் ஆண்டு ரிட்சர்ட்ஸ் தலைமையிலான மேற்கிந்தியதீவுகள் அணியிடம் சொந்த மண்ணில் அவுஸ்திரேலிய அணி தொடரை 1:2 என்ற கணக்கில் இழந்தபின்பு 16 ஆண்டுகளில் தென்னாபிரிக்காவிடம் இழந்துள்ளது.


இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் எதிர்வரும் 3 ஆம் திகதி சிட்னியில் ஆரம்பமாகிறது.

**ஒரு வெற்றி;**
**தென்னாபிரிக்கா நம்பர்–1**

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரை தனதாக்கிய தென்னாபிரிக்க அணி மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற்றால் ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தை பிடித்து உலகின் நம்பர்–1 டெஸ்ட் அணியாகத்திகழும்.

# அஷ்ரபுல்லா? முரளிதரனா? சாதிக்கப் போவது

# விறு விறுப்பான கட்டத்தில் முதலாவது டெஸ்ட்



(மிர்பூர்)

மொகமெட் அஷ்ரபுல்லின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் சரிவிலிருந்து மீண்ட பங்களாதேஷ் அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 254 ஓட்டங்களை எடுத்திருந்தது.

முன்னதாக இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 6 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 405 ஓட்டங்களை எடுத்து தனது ஆட்டத்தை இடைநிறுத்தி பங்களாதேஷ் அணிக்கு வெற்றி இலக்காக 521 ஓட்டங்களை நிர்ணயித்தது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 26ஆம் திகதி மிர்பூரில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 293 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 178 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 28ஆம் திகதி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 291 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, மஹேல ஜெயவர்த்தன–டில்சான் ஜோடியின் 107ஓட்டங்கள் என்ற சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 6விக் கெட்டுக்களை மாத்திரமிழந்து 405 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டத்தை இடைநிறுத்திபங்களாதேஷ் அணிக்கு வெற்றி இலக்காக 521 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா 166 ஓட்டங்களையும் சங்கக்கார 67, சமரவீர 62 மற்றும் டில்சான் 53 பந்துகளில் 3 பவுண்டரி,ஒரு சிக்ஸர் அடங்கலாக 47 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹுசைன் ஜேன்ர்,மோர்ட்டாஷா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அலாம்,ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து வெற்றி இலக்காக 521 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, மொகமெட் அஷ்ரபுல்லின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 254 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் அணித்தலை வர் மொகமெட் அஷ்ரபுல் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும் தமீம் இக்பால் 47,ஸிட்டிக் 37 மற்றும் ஆட்டமிழக்காமல் சகீப் அல் ஹசன் 34 ஓட்டங்களையுமெடுத்தனர்.

பந்து வீச்சில் முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும் பிரசாத் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர் ஐந்தாவதும் இறுதி நாளான இன்று பங்களாதேஷ் அணி கைவசம் 5 விக்கெட்டுக்கள் உள்ள நிலையில் 267 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி பெறலாம்.

இந்த ஓட்ட எண்ணிக்கையை பெற அஷ்ரபுல்லால் முடியுமா? அல்லது மீதம் 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி முரளிசாதிப்பாரா? என்பது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



## 3 வினாடிகளில் சிவப்பு அட்டை பெற்று பிரேட் உலக சாதனை

இங்கிலாந்து கழக கால்பந்து வீரரான டேவிட் பிரேட் குறைந்த நேரத்துக்குள் சிவப்பு அட்டை பெற்று புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்தின் இரண்டாம் தர கழகமான சிப்பின்ஹாம் டௌன் அணிக்காக விளையாடி வரும் பிரேட்,பெஷ்லி அணிக்கு எதிராக கடந்த சனிக்கிழமை களமிறங்கினார்.

எனினும் அவரால் 3 வினாடிகள் மாத்திரமே களத்தில் இருக்க முடிந்தது. போட்டி ஆரம்பமான மூன்றாவது வினாடியில் பிரேட்டுக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டது.

இதன்போது அவர் எதிரணி வீரரான கிறிஸ் நோலை தடுக்கி விழச் செய்ததற்காகவே சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டது. இதன்படி பிரதான கால்பந்து போட்டி ஒன் றில் குறைந்த நேரத்தில் சிவப்பு அட்டை பெற்ற வீரராக டேவிட் பிரேட் புதிய உலக சாதனை படைத்தார். இதற்கு முன்னர் 1990ஆம் ஆண்டு நடந்த இத்தாலி லீக் போட்டியில் குயிசப்பே லொரன்சோ 10ஆவது வினாடியில் சிவப்பு அட்டை பெற்றதே சாதனையாக இருந்தது.

## மாலைதீவு ஜனாதிபதி இலங்கை வருகிறார்

(கொழும்பு)

மாலைதீவின் புதிய ஜனாதிபதி மொகமட் நசீத் இரண்டுநாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று இலங்கை வரவுள்ள மொகமட் நசீத், மாலைதீவின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

ஜனவரி மாதம் 4ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் மாலைதீவு ஜனாதிபதி இவ்விஜயத்தின்போது இலங்கை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் உட்பட முக்கியஸ்தர்களை சந்தித்து இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளார். (எ-5)

## யுத்தத்திற்கு ஆதரவளிக்குமாறு ஐ.தே.கவிடம் தேரர்கள் வேண்டுகோள்

(கொழும்பு)

கட்சி பேதமின்றி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் யுத்தத்திற்கு ஆதரவளிக்கவேண்டும் என கண்டி மல்வத்த பீட மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய உள்ளிட்ட குழுவினர் ஆசி பெற்றுக்கொள்ளும் நோக்கில் மல்வத்த பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரி பீடத்தின் மாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரர் ஆகியோரை சந்தித்த போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொள்கை முரண்பாடுகளை களைந்து அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளுக்கு பிரதான எதிர்க்கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என தேரர்கள் இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை நாடு பிளவுபடுவதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அதனை தமது கட்சி வன்மையாக எதிர்ப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தேசப்பற்றாளர் என தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளும் பலர் உண்மையில் தேசப்பற்றுடையவர்கள் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## புலிகள் தொடர்பான நிலைப்பாட்டை இந்தியா வெளிப்படுத்த வேண்டும் விமல் வீரவன்ச வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்[பு] குறித்த நிலைப்பாட்டை இந்தியா வெளிப் படுத்த வேண்டுமென தேசிய சுதந்திர முன்ன ணியின் தலைவர் விமல் வீரவன்ச குறிப்பிட் டுள்ளார்.

தமிழீழ போராட்டத்திற்கு இந்திய மத்[திய] அரசு ஆதரவு அளிக்கும் என்ற விடுத[லைப்] புலிகளின் தலைவரது கருத்து தொடர்[பில்] இந்தியாவின் நிலைப்பாடு என்ன என அ[வர்] கேள்வி எழுப்பியுள்ளார். (ச-5)

## மனித உரிமை நிலைவரம் தொடர்பி[ல்] விசாரிக்க ஐ.நாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நடந்த சில மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் ஐ.நா.மன்றம் விசாரணைகளை நடத்த வேண்டும் என ஹாங்காங்கிலிருந்து இயங்கும் ஒரு மனித உரிமை அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பெண் உறுப்பினர் போல தோன்றும் ஒரு பெண் போர்முனையில் கொல்லப்பட்டபின் அவரது உடலை பாதுகாப்பு படையினர் அவமானபடுத்துவது போன்ற ஒரு வீடியோ, இணையத்தளம் ஒன்றில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஒரு கத்தோலிக்க அநாதை ஆசிரமத்திலிருந்து சிறார்களை பலவந்தமாக கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இலங்கையில் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கபடுபவர்களுக்காக வழக்குகளில் வாதாட முன்வந்துள்ள வழக்குரைஞர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன புகார்கள் குறித்து ஐ.நா மன்றம் விசாரிக்க வேண்டும் என்று ஹா[ங்] காங்கிலிருந்து இயங்கும் ஆசிய மனித உ[ரி]மை இயக்கம் ஐ.நா மன்ற தலைமைச் செயல[ாள]ரிடம் கோரியுள்ளது. (ச-5)

## கச்சா எண்ணெயின் வி[லை] மீண்டும் உயர்வடைகிறது

கச்சா எண்ணெய் விலை மீண்டும் உயரத் தொடங்கியிருக்கிறது. காஸா பகுதியில் தொ[ட]ர்ந்து நான்காவது நாளாக இஸ்ரேலிய இரா ணுவம் தாக்குதல் நடத்தியமையால் அ[ங்] குள்ள எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்[பட்டி] ருக்கிறது எனவும் இதனால் மத்திய கிழக்[கு] நாடுகளில் இருந்து எண்ணெய் வருவ[தில்] சிக்கல் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இதன் காரணமாக நியூயோர்க் சந்[தை] யில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து[ள்ள]து.

கடந்த யூலையில் 147 டொலராக இரு[ந்த] ஒரு பரல் கச்சா எண்ணெயின் விலை இ[ப்] போது 100 டொலருக்கும் மேல் குறைந்து 4[...] டொலருக்கும் குறைவான விலையில் இரு[க்] கிறது. ஆனால் தற்போது கச்சாய் எண்ணெ யின் விலை மீண்டும் உயரத் தொடங்[கியு]ள்ளது.

## விமானம் மற்றும் எறிகணை...

நடத்தப்பட்டது.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான உதயகுமார் மதியழகன் (வயது 5), உதயகுமார் ராஜ் (வயது 8) உதயகுமார் உதயா (வயது 2) ஆகிய மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளதுடன் அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் வீடுகள் பலவும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிலாவத்தை, தீத்தக்கரை, தியோநகர் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்று வான் படையின் வானூர்திகள் மூன்று தடவைகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

இதில் பொதுமக்களின் மூன்று வீடுகள் அழிந்துள்ளதுடன் கடற்றொழிலாளர்களின் வாடிகள் சேதமடைந்துள்ளன. பத்துக்கும் அதிகமான கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளன.

வான் படையின் வானூர்திகள் தாழப் பறந்து தாக்குதல் நடத்தியதால் அப்பகுதி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வான் படையின் தாக்குதல் நடத்தப்பட்ட அதேவேளை அப்பகுதியை நோக்கி படையினர் தமது பின் தளங்களில் இருந்து தொடர் எறிகணைத் தாக்குதலையும் நடத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வற்றாப்பளை கேப்பாப்புலவு பொதுமக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்று முற்பகல் 11.30 நிமிடமளவில் சிறிலங்கா வான் படையின் எம்.ஐ -24 ரக உலங்கு வானூர்தி தாக்குதல் நடத்தியுள்ளது.

இத் தாக்குதலினால் மாடு மேய்த்துக் கொண்டிருந்த பொதுமக்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர். கேப்பாப்புலவு சூரிபுரத்தை சேர்ந்த பெருமாள் சண்முகமூர்த்தி (வயது 27) மற்றும் வற்றாப்பளையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ரவிக்குமார் (வயது 38) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் ரவிக்குமார் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என வன்னித் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## இரண்டு கப்...

தரையிறக்கி உள்ளனர். கனடா நாட்டில் பதிவு செய்யப்பட்ட கப்பல் இந்தோனேசியாவில் இருந்து ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு முல்லைத்தீவு கடற்பரப்பை அடைந்தது.

முல்லைத்தீவை அண்டிய கடற்பரப்பில் இரு நாட்கள் தரித்து நின்ற கப்பலில் இருந்து ஆயுதங்கள் அனைத்தும் இறக்கப்பட்டன. இந்தக்கப்பலில் பீரங்கி மற்றும் மோட்டார்களுக்கு தேவையான எறிகணைகள் பெருமளவில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதனிடையே வங்காளவிரிகுடாவின் ஊடாக இலங்கை நோக்கி வந்த நடுத்தர லோலர் ஒன்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் பொருட்களை தரையிறக்கி உள்ளது. றோலர் படகில் மருந்துப் பொருட்களும் மருத்துவ உபகரணங்களும் எடுத்து வரப்பட்டிருந்தன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## புலிகள் மீதா...

மகிந்த அறிவித்தார்.

இந்நிலையில் புலிகள் மீது மீண்டும் தடைவிதிப்பது பற்றி நேற்று ஜனாதிபதி ஆலோசனை நடத்தியதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி,மகிந்த அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ள நிலையில் இந்த தடை அறிவிப்பு எப்போது வேண்டுமானாலும் வெளியிடப்படக் கூடும் என்றும் கூறப்படுகிறது. (ச-5)

## இரணைமடு...

தகர்ப்பதற்கு பாங்கியை அவர்கள் பயன்படுத்தியதுடன் சூட்டாதரவுகளை வழங்கும் பொருட்டு கடற்புலிகள் இரணை மடு நீரேரியில் தாக்குதல் விசைப்படகுகளையும் பயன்படுத்தியிருந்தனர்.

இதன் போது விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் ஏழு படகுகளை பயன்படுத்தியிருந் தனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## எரிபொருட்களி...

மாநாட்டில் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார்.

எரிபொருள்களின் விலைகள் குறைக் கப்பட்டதால் நேற்று நள்ளிரவு முதல் பேருந்துக் கட்டணங்களும் குறைக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும் அது தொடர்பான அறிவித்தல் எவையும் வெளியாகவில்லை. (ச-5)

## சர்வகட்சிக் குழுவின்...

இந்திய ஊடகங்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது, இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் தொடரும் யுத்தம் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தீர்வுக்கு வராது என்பதே இந்தியாவின் நிலைப்பாடு. பேச்சுவார்த்தை மூலமே தீர்வு எட்டப்படும். 1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய, இலங்கை ஒப்பந்தம் இதற்கு அத்திபாரமிட்டுள்ளது என முகர்ஜி தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் மந்தகதியில் முன்னெடுக்கப்படுவது குறித்து தனது அதிருப்தியை வெளியிட்டிருக்கும் இந்திய வெளி விவகார அமைச்சர், இலங்கையில் நடைபெறவிருக்கும் தேர்தலை முன்னிட்டு சில நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. மாகாண சபைகளுக்கே தற்பொழுது தேர்தல்கள் நடைபெறவுள்ளன. எனவே அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறினார்.

இலங்கையின் சிறுபான்மை இனத்தவர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது பற்றி ஆராய்வதற்கு உயர்மட்டக் குழுவொன்றை நியமிப்பது வரவேற்கத்தக்கது. எனினும் இந்த அதிகாரப் பகிர்வு மூலமான தீர்வு நாட்டின் இறைமையையும் ஆட்புல ஒருமைபாட்டையும் பாதிக்காத வகையில் அமைந்திருக்க வேண்டும் என்றார்.

அதிகாரத்தை பகிர்வது தொடர்பான சர்வகட்சிக் குழுவின் அறிக்கையை அமுல்படுத்துவதே நீண்டகால பிரச்சினைக்கு உறுதியான தீர்வாக அமையும். அதேநேரம், தான் இலங்கைக்குச் செல்ல வேண்டுமென தமிழகத்திலிருந்து வலியுறுத்தப்படுகின்றபோதும் கொழும்பு செல்வது பற்றி இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழர்கள் வாழும் பகுதியில் 2009 ஆம் ஆண்டு தேர்தல் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியப்பத்திரிகையாளர்களுடன் கடந்த திங்கட்கிழமை இரவு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்துள்ளார். அப்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது, விடுதலைப் புலிகளின் முக்கிய பகுதியான கிளிநொச்சி உள்ளிட்ட இரு போர்த்தளங்களை கைப்பற்றுவதற்காக இலங்கை இராணுவத் துருப்புக்கள் அங்கு முற்றுகையிட்டுள்ளன. இடம்பெயர்ந்து சென்ற மக்களின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டவுடன் வடக்கிலங்கைப் பகுதியான வன்னியில் 2009 ஆம் ஆண்டு தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

மக்கள் வங்கி
அறிவித்தல்
யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் இன்று (31.12.2008) மட்டும் காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணி வரை மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.
த.க.ஆனந்தராசா,
உதவிப் பொது முகாமையாளர்,
வட வலயம்,
மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்.
2008.12.30
(C-1936)

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவையில்
A/L 2011
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவு
ஆரம்பம்:- ஜனவரி 3
சனி காலை 8.30 மணி
புதிய அனுமதிகள் இன்று முதல்
NEC
Navalar Education Centre
Clock Tower Road, Jaffna
(பெருமாள் கோவிலுக்கு அருகில்)
(C-1935)

SUBRA சித்தன்கேணி
SUBRA வட்டுக்கோட்டை
இரு இடங்களிலும்
2011 A/L
02-01-2009 4.00
A/L DAY
01-01-2009 4.00
தரம் 1 – O/L தமிழ்–ஆங்கில மொழி மூலம்
03-01-2009 காலை 7.00
ஒரே நாளில்
(C-1930)

DMI
A/L 2011
ஜனவரி - 10
காலை 9.00 மணி

இப் பத்திரிகை-வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்[டது]